
உள்ளே....

அலைகளின் மீது ஒரு அபாயப் பயணம்

கப்டன் அன்பரசன்/ அக்பர்


விழுதுகள்





- தமிழீழத் திருநாட்டில்...
- அதிர்வு- சிறுகதை
- தமிழீழத்தில் நாசவேலைகள்...

கிளாலி கடக்க அனுமதி இல்லை...





அன்பளிப்பு 40P

கொதிநிலையில் இந்திய சாம்ராச்சியம்...

## வவுனியாவில் திடீரென காணாமல் போவோர் தொகை அதிகரிப்பு

வவுனியாவில் காணாமல் போவோர் தொகை அதிகரித்து வருவதாக சமீபத்தில் அங்கு சென்று வந்த ஒருவர் உறுதிப் படுத்தியுள்ளார். சிறீலங்கா இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் PLOT குழுவினர் உலாவித் திரிவதாகவும் மக்களிடை பணம்பறிப்பதாகவும் அவர் கூறினார். இதற்கு முன்னர் கிடைத்த செய்திகளின்படி பண்டாரிக்குளம் பாடசாலையில் இருந்து 3 பெண்களும், ஆடை தயாரிப்பு நிலையத்திலிருந்து 3 பெண்களும், வவுனியா கல்வித்திணைக்களத்திலிருந்து பொன்னுத்துரை முருகேசு என்பவரும் உட்பட பதினொரு தமிழர்கள் இனம்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.


# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 21-05-1993


# இராணுவத் தீர்வுக்கான ஆயத்தங்கள்!

- பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலாளராக கூட்டுப்படைத் தளபதி
- புதிய இராணுவத் தளபதியாக வடபிராந்திய தளபதி

சிறீலங்கா அரசாங்கம் இராணுவத் தீர்வுக்கான ஆயத்தங்களை வலுப்படுத்தக் கூடிய முறையில், அமைப்பு மாற்றங்களைச் செய்யத் தொடங்கியுள்ளது. கூட்டுப்படைத் தளபதியாக இருந்துவரும் கமில்டன் வணசிங்கா, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இதன் மூலம், அரசியல் தீர்மானம் எடுக்கும் சக்திகளாகவும் இராணுவத்தினரை மாற்றும் முயற்சிகளில் சிறீலங்கா அரசு ஈடுபடத் தொடங்கியுள்ளமை தெளிவாகின்றது. கமில்டன் வணசிங்கா, தமிழீழ ஆக்கிரமிப்பு யுத்தத்தினை நெறிப்படுத்தி வந்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர். இவர் இப்பதவிக்கு நியமனம் செய்யப்படுவதன் மூலம், அரசியல் தீர்மானம் எடுக்கும் மட்டத்திலும் இராணுவத் தீர்வுக்கு சாதகமான போக்கு வலுவடையக்கூடிய சாத்தியக்கூறுகள் வலுப்பெற்றுள்ளன. இதற்கிடை வடபிராந்திய தளபதியாக உள்ள ஜெரிடி சில்வா, புதிய இராணுவத் தளபதியாக நியமிக்கப்படவுள்ளதாக நம்பப்படுகிறது. இதுவும் இராணுவத் தீர்வை இலகுவாக்குவதற்கான ஒரு முயற்சி எனக்கருதப்படுகிறது. இதுவரை, வடக்கின் மீது நேரடியாக யுத்தத்தை நடத்தி அனுபவம் பெற்றுள்ள இவரது தலைமையில், சிறீலங்கா இராணுவம் இயங்கினால் தாக்குதலைத் திட்டமிடுவது இலகுவாக இருக்கும் என சிறீலங்கா அரசாங்கம் கருதுவதாகத் தெரிகிறது.

குடாநாட்டின் மீது பெரிய அளவில் படையெடுப்பை நடாத்தி புலிகளின் கோட்டையைப் பிடிப்பதா அல்லது கிழக்கே முழுமையாக ஆக்கிரமித்து, அதனை சுபீகரம் செய்தபின் வடக்கில் கைவைப்பதா என இராணுவ வட்டாரங்கள் கடும் ஆலோசனை நடாத்தி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், இவ்வருட ஆரம்பம் முதல் சிறீலங்கா அரசு தனது இராணுவச் செயற்பாடுகளை மந்த நிலையில் வைத்திருக்கின்றது. இதன்மூலம் போரைத் தீவிரமாகவும் அதிக பலத்துடனும் நடாத்த தேவையான முன் தயாரிப்புக்களில் ஈடுபட்ட சிறீலங்கா இராணுவத்திற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. 92 ஆம் ஆண்டு படையினர் தரப்பில் ஏற்பட்ட பெருமளவு உயிரிழப்புக்களும் பெருந்தொகையான ஆயுத இழப்புக்களும் சிறீலங்கா படையினருக்கு பெரும் மனச்சோர்வை


தொடர்ச்சி 14ம் பக்கம்


## சந்தேகங்கள் தொடர்கின்றன
## புலிகளுக்கு தொடர்பில்லையென்கிறார் ஜனாதிபதி

சிறீலங்காவின் முன்னைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் கொலை குறித்து இதுவரை நடந்த விசாரணைகளில் அக்கொலைக்கும் புலிகளுக்கும் தொடர்பு இருப்பதற்கான எவ்வித ஆதாரங்களும் கிடைக்கவில்லை என சிறீலங்காவின் புதிய ஜனாதிபதி டி.பி.விஜயதுங்க கொழும்பில் தாம் கூட்டிய பத்திரிகையாளர் மகாநாட்டில் கூறியுள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்ட இடத்தை இரண்டு மணி நேரத்திற்குள் கழுவிச் சுத்தப்படுத்தியது ஏன் என்ற கேள்வி எழுந்துள்ளது. உடனடியாக இடத்தைக் கழுவிச் சுத்தப்படுத்த உத்தரவிட்டது யார் என்ற விசாரணையில் பொலிசார் தலைமையினரைப் பிடித்துக் கொண்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.


தொடர்ச்சி 14ம் பக்கம் ....


## மாகாணசபைத் தேர்தல் முடிவுகளில் அரசியல் உறுதியின்மை

சிறீலங்கா அரசின் மாகாணசபைத் தேர்தலில் கொழும்பை உள்ளடக்கிய மேல் மாகாணசபையில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி வெற்றி பெற்றும் [illegible] மேல் மாகாணசபை, தென் மாகாணசபை ஆகியவற்றில் சிறீலங்கா சுதந் [illegible]


தொடர்ச்சி 14ம் பக்கம்





புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



## முதலே கோணல் என்றால் ...

"முதலே கோணல் என்றால் முற்றிலும் கோணல்" என்பது தமிழ் முதுமொழி. சிறீலங்காவின் புதிய ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜயதுங்காவின் பத்திரிகை மகாநாட்டுச் செய்தியை வாசித்ததும், இந்த முது மொழிதான் ஞாபகத்திற்கு வருகிறது.

"தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்த நான் விரும்புகின்றேன்.

தலைவர்கள் தலைவர்களைத் தான் சந்திக்க வேண்டும். தலைவர்கள் இரண்டாம் வரிசையில் அல்லது மூன்றாம் வரிசையில் அல்லது நான்காம் வரிசையில் உள்ளவர்களைச் சந்திக்க முடியாது. தலைவர்களே சந்தித்து முரண்பாடுகளை கலந்துரையாட வேண்டும். அப்படியானால் தான் அது இறுதியானதாக மாறும். இல்லாதுவிடில் நீங்கள் பேசி, பேசிக் கொண்டே செல்வீர்கள். காரியம் எதுவும் நடக்காது.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் படுகொலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சம்பந்தப்பட்டிருக்கின்றதா என்பதில் இதுவரை எதுவித நிரூபணமும் கிடையாது. நாங்கள் விசாரணையை இன்னும் முடிக்கவில்லை."இது விஜயதுங்காவின் பேச்சின் முதற்பகுதி. இப்பகுதியைப் படித்ததும் சிறீலங்காவின் புதிய ஜனாதிபதி அரசியல் யதார்த்தத்தை உணர்ந்து பேசுவது போல் ஒரு பிரமை.

ஆனால் நடுப்பகுதி பேச்சு, இந்த முதல்பகுதியிலிருந்து மாறுபட்டு, "தமிழர் பிரச்சனையைத் தீர்த்துவைக்க பல கட்சி வட்ட மேசை மகாநாட்டுக்கான ஒரு யோசனை பற்றி ஆராயப்படுகிறது. தீர்வுக்காக ஆராயப்படும் பலவழிகளில் இதுவும் ஒன்றாகும்." என்பதன் மூலம் சிறீலங்காவின் ஜனாதிபதி பிரேமதாசாவின் வாரிசுதான் தானும் என்பதை அம்பலமாக்கினார். இலங்கைத் தீவின் தமிழ்த் தேசிய இனத்தினை ஏமாற்றுவதற்கு, ஐக்கிய தேசியக் கட்சி இந்த வட்ட மேசை மகாநாடு என்னும் தீர்வை கால் நூற்றாண்டுக்கு மேலாக அடிக்கடி உச்சரித்து வருவது வழமை. பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் என்ற கதையாக ஜனாதிபதி விஜயதுங்கா இந்த வட்டமேசை மாநாடு பற்றி பேசியதன் மூலம் அவரிடத்தில் தமிழ்த் தேசிய இனப்பிரச்சனைக்கு புதிய தீர்வு எதுவும் இல்லை என்பதை வெளிப்படுத்திவிட்டார்.

அடுத்து ஜனாதிபதி விஜயதுங்காவின் பேச்சின் இறுதி வரிகள் அவர் பிரேமதாசாவின் வாரிசு மட்டுமல்ல, சிங்கள பௌத்த பேரின வாதத்தின் உருவம் தான் என்பதையும் உறுதிப்படுத்திவிட்டது. "தமிழர்களின் நீறு பூத்த நெருப்பாக இருக்கும் அதிருப்தியை நான் கவனத்தில் எடுப்பேன். தமிழர் பிரச்சனை என்ற ஒன்றில்லை. பயங்கரவாதப் பிரச்சனை ஒன்றுதான் இருக்கிறது.

பயங்கரவாத வன்முறையைக் களைய, எதிர்காலத்தில் வெளிநாட்டு உதவிக்கான தேவை எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எம்மாலேயே இதனைச் சமாளிக்கமுடியும். எமது பாதுகாப்பு நடவடிக்கைகளை நாம் பலப்படுத்த வேண்டியிருக்கிறது. அதாவது நாம் மேலும் அதிக பாதுகாப்பு ஆளணியினரை ஈடுபடுத்த வேண்டியுள்ளது." எனும் ஜனாதிபதி விஜயதுங்காவின் பேச்சு தமிழருக்கு பிரச்சனையே இல்லை. அதிருப்திதான் உண்டு. தமிழர்களின் போராட்டம் பயங்கரவாதம் என்னும் கருத்துக்களையும், இராணுவத் தீர்வு மூலமே இப்பிரச்சனையைச் சமாளிக்க அவரும் முடிவு செய்து ஆளணி திரட்டுவதில் அக்கறை காட்டுகிறார் என்பதையும் தெட்டத் தெளிவாக்குகின்றது. அப்படியானால் முன்னைய ஜே.ஆர்., பிரேமாவின் வரிசையில் இவரும் ஒரு புறம் இராணுவத் தீர்வு, மறுபுறம் உதட்டளவில் அரசியல் தீர்வு என்கின்ற இரட்டை வேடத்தை தாங்க ஆயத்தமாகிவிட்டார். பின்பு, இவர் ஏன் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனுடன் தான் பேச விரும்புவதாக ஒரு புதிய வேடம் போடுகிறார்? இங்குதான் புதிய ஜனாதிபதியின் நரித்தனம் வெளிப்படுகிறது.

சிங்கள தேசிய இன மக்கள், பௌத்த சிங்கள வெறித்தனத்தின் விளைவுகளை அனுபவ பூர்வமாக உணரத் தொடங்கிவிட்டனர். இதனால், பௌத்த -சிங்கள தீவிர வாதம் தேய்வடைந்த நிலையில் நிற்கின்றது. சிங்கள மக்கள் நாடு வறுமைப்பட்ட நிலையில், வாழ்க்கைச் செலவு கிடுகிடுவென ஏறிச் செல்வதையும், அதே வேளை பெருந்தொகையான பணமும் சிங்கள வாலிபர்களும் தேவையற்ற யுத்தத்திற்கு வீணடிக்கப்படுவதையும் உணரத் தொடங்கிவிட்டனர். இதனால், என்றுமில்லாத அரசியல் நெருக்கடி சிறீலங்காவின் அரசியலில் நிலவுகின்றது. இந்நிலையில், மீளவும் சிங்கள -பௌத்த பேரினவாத வெறியைக் கட்டி எழுப்புவதற்கு கால அவகாசம் தேவை. இதற்காக சிறிது காலம் போலியான அமைதியை ஜனாதிபதி விரும்புகின்றார். இந்த அடிப்படையிலேயே ஜனாதிபதி தமிழ்த் தேசியத் தலைவர் பிரபாகரனை சந்தித்துப் பேசப் போவதாக ஒரு அரசியல் மாய்மாலம் புரிகிறார். இதில் இன்னொரு தன்மையும் உண்டு. சிறீலங்காவின் அரசியலில் தங்களைக் 'கீரோ'க்களாக்குவதற்காக அரசியல் வாய்வீச்சுக்களை அள்ளி வீசுவது வழமை. அவ்வகையில் முதலில் அமைதிப் புறாவாக தன்னைக் காண்பிக்க இவ்வாறு கூறிய ஜனாதிபதி, மறுபுறத்தில் தன்னைச் சிங்கள பௌத்த மாவீரனாகக் காட்டுவதற்காக, "எனது உயிருக்காக நான் ஏன் பீதி கொள்ள வேண்டும் ?" என வீரவசனம் பேசி சிங்கள பௌத்த தேசிய இனத்திற்காக எதையும் தாங்கத் தயார் எனக் காட்டுகிறார். எனவே புதிய ஜனாதிபதியின் ஆரம்பப் பேச்சு முதல் கோணல் என்றால் முற்றும் கோணல் என்ற கதையாகவே இருக்கின்றது. உண்மையில் சிறீலங்கா ஜனாதிபதி, தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனுடன் பேச விரும்பினால் அதற்கான ஆரம்ப அடித்தளத்தை பிரபாகரன் பி.பி.சி. பேட்டியில் அறிவித்து விட்டார். தமிழர் தாயகத்தின் பூகோள உரிமை அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி ரீதியான தீர்வை முன்வைத்தால் பரிசீலிக்கத் தயார் என்பதே அவ் அடித்தளம். அவ்வடித்தளத்தின் மீது ஜனாதிபதி விஜயதுங்க பேசமுற்பட்டால் நிச்சயம் அது அர்த்தமுள்ளதாக அமையும். ஆனால், தமிழர் போராட்டத்தையே பயங்கரவாதப் பிரச்சனை எனும் விஜயதுங்க எதைப் பேசப் போகின்றார்? ■

# யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவனின் மரணத்திற்கு அரசாங்கமே முழுப்பொறுப்பு

**கிளாலிக் கடற்பரப்பில் அப்பாவிப் பொதுமக்களும், மாணவர்களும் அநியாயமாகப் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் முடிவில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயம், சர்வதேசச் செஞ்சிலுவைச்சங்கம், யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அலுவலகம் என்பவற்றிற்கு ஊடாக சிறீலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட மகஜரை இங்கு முழுமையாகத் தருகிறோம்.**

அரச பணிப்பின் பேரில் 24-3-93 அன்று மாலை 6.30 மணியளவில் 'மகாபொல' வைபவத்தில் கலந்து கொள்வதற்காக வவுனியா, கொழும்பு, திருகோணமலை மாவட்டங்களுக்குச் செல்வதற்காக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 30 மாணவர்கள், அவர்களை வழியனுப்பச் சென்ற ஒரு சிலருடன் கிளாலிக் கடற்கரையில் படகுச் சேவைக்காகக் காத்து நின்றிருந்தனர்.

அவ்வேளையில், கடலில் ரோந்து சென்ற இலங்கைக் கடற்படைக் கப்பல்களிலிருந்து கரையை நோக்கிப் பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இப்பீரங்கிக் குண்டுகள் கரையிலே நின்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கு அருகில் வீழ்ந்து வெடித்தன. இதனால் எமது பல்கலைக்கழக முதலாம் வருட மருத்துவ பீட மாணவன் செல்வன் ஞானசூரியர் வில்சன் நிக்கலஸ் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். மேலும் இரு கலைப்பீட மாணவர்கள் படுகாயம் அடைந்தனர்.

அரச கடைற்படையினரின் இந்த அநியாயமான செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். அரசாங்கத்தால் நடத்தப்படும் அரச வைபவம் ஒன்றிற்குச் செல்வதற்காக கரையிலே காத்துநின்ற மாணவர்களுக்கே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

கிளாலிப் பாதை தடைசெய்யப்பட்டுள்ளது என்பது எமக்குத் தெரியும். ஆனால், 'மகாபொல' வைபவத்தில் கலந்து கொள்ளாமல் விட்டால் அவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில் தொடர்ந்து கிடைக்கும் வாய்ப்பு இல்லை என்பதனாலேயே ஆபத்தான பயணமொன்றை மேற்கொள்ளுவதற்காக அவர்கள் எத்தனித்தனர்.

சென்ற வருடம் மாத்தளையில் நடைபெற்ற மகாபொல வைபவத்திற்கு சமூகம் அளிக்காத மாணவர்களுக்கு இதுவரை மகாபொல கிடைக்கவில்லை. ஆனால், வைபவத்தில் கலந்து கொள்ளாத மாணவர்களுக்கும் மகாபொல கிடைப்பதற்கு வழி செய்வதாக எமக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டது. ஆனால், இதுவரை எதுவுமே நடைபெறவில்லை. இதுமட்டும் அல்ல. எமக்குத் தேவையான பல விடயங்கள் பற்றி எத்தனையோ தடவைகள் எமக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டும் எதுவுமே செயற்படுத்தப்படவில்லை. இக்காரணங்களாலேயே இம்முறை வைபவத்தில் கலந்து கொள்வதற்கு மாணவர்கள் முற்பட்டனர். யாழ் குடாநாட்டிற்கான சகல பாதைகளும் மூடப்பட்ட நிலையில் இங்குள்ள மாணவர்களை வவுனியா, கொழும்பு, திருகோணமலை மாவட்டங்களுக்கு அரசாங்கம் அழைத்ததில் என்ன நியாயம் உள்ளது என்பது எமக்குத் தெரியவில்லை. யாழ் குடாவை விட்டு வெளியே வரமுடியாத நிலையில் அவர்கள் எப்படிப் போக்குவரத்துச் செய்ய முடியும்?

யாழ்ப்பாண மக்களைப் பற்றியோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களைப் பற்றியோ அரசாங்கம் எவ்வித அக்கறையும் கொண்டுள்ளதாக எமக்குத் தெரியவில்லை. யாழ் பல்கலைக்கழக வெளிமாவட்ட மாணவர்களுக்கும் யாழ்ப்பாணத்திலேயே புலமைப்பரிசிலை வழங்கியிருந்தால் இன்று நாம் ஒரு மாணவனை இழந்திருக்க மாட்டோம்.

எம்மாணவர்களை வவுனியாவிற்கு அழைத்து வேண்டுமென்றே இத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. கொல்லப்பட்ட எமது பல்கலைக்கழக மாணவனின் மரணத்திற்கு அரசாங்கமே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும். இது சம்பந்தமாக எமக்கு சரியான காரணங்கள் தரப்படாவிடில் எமது மாணவ போராட்டத்தை நாம் விரிவுபடுத்த வேண்டி ஏற்படும். எனவே எமது மாணவனின் மரணத்திற்கு அரசாங்கம் பதிலளிக்க வேண்டும்.

கிளாலிப் பயணத்தில் மக்கள் கொல்லப்படுவது இது முதல் முறையல்ல. கடந்த பல மாதங்களாக நாளாந்தம் மக்கள் கொல்லப்பட்டு வருகிறார்கள். பயணம் செய்பவர்கள் பொதுமக்கள் எனத் தெரிந்தும் இராணுவத்தினர் அவர்களை வேண்டுமென்றே கொலை செய்து வருகின்றனர்.

எனவே அரசாங்கம் வாய்மூடி மௌனியாக இருக்காமல் அல்லது படையினரின் பொய்களைப் பிரதிபலிக்காமல் பொருளாதாரத் தடையை நீக்குவதற்கும், முக்கியமாகப் போக்குவரத்தை சீராக்குவதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தினமும் எம்மக்கள் அழிவதை நாம் அனுமதிக்க முடியாது. எனவேதான் நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற முறையில் உங்களிடம் நாம் பின்வரும் கோரிக்கைகளை முன் வைக்கிறோம்:-

1. இறந்த எம் மாணவனின் மரணத்திற்கு அரசாங்கம் பதில் தரவேண்டும். யாழ் குடா நாட்டு மக்கள் பயணம் செய்வதற்கு பூநகரிப் பாதையைத் திறந்து விட வேண்டும். அல்லது கிளாலிக் கடற்பரப்பு மீது விதிக்கப்பட்ட தடை வாபஸ் பெறப்பட வேண்டும்.

2. படிப்பதற்கும், ஆய்வு கூட வேலைகளுக்கும் அத்தியாவசியத் தேவைகளான மண்ணெண்ணெய், காகிதாதிகள் ஆகியவற்றிற்கான தடை, போக்குவரத்திற்கு இன்று கைகொடுக்கும் துவிச்சக்கர வண்டிக்கும், அதற்குத் தேவையான உதிரிப்பாகங்களுக்குமான தடை போன்றவற்றால் எமது மாணவ சமுதாயத்தின் கல்வி வளத்தை அழிப்பதை உடன் நிறுத்தவேண்டும்.

3. கண்மூடித்தனமாக கண்டபடி குண்டு வீச்சு மூலமும் 'செல்' தாக்குதலின் மூலமும் வேண்டுமென்றே குடிமக்களைக் கொல்வதனையும், அங்கவீனப்படுத்துவதனையும் நிறுத்துமாறு கட்டளையிட வேண்டும்.

4. பின்வருவனவற்றின் மீதான கட்டுப்பாட்டை அல்லது தடையை நீக்கி எமது கல்வி வளங்களைப் பாழ்படுத்துவதனை நிறுத்துக.

(அ) மண்ணெண்ணெய். (இரவில் படிப்பதற்கும், ஆய்வு கூட பயன்பாட்டிற்கும் இது அவசியம்.)
(ஆ) எழுதுகருவிகள், அச்சிடும் தாள்கள் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.
(இ) மிதிவண்டி, அதன் உதிரிப்பாகங்கள். (எமக்குக் கிடைக்கத்தக்கவாகவுள்ள ஒரேயொரு போக்குவரத்துச் சாதனம் இதுவாகும்.)
(ஈ) உணவுப் பொருட்கள், மருந்துகள். (இவற்றின் மீதான பொருளாதாரத்தடை அல்லது கட்டுப்பாட்டால் எம்மக்கள் சிக்குண்டு மெல்லச் செத்து மடிகின்றனர். இதனால் பலர் இறந்துள்ளனர்.) ■

### ஸ்ரீலங்காப் பொலிசாரின் தரக்குறைவிற்கு

# இராணுவ மயமாக்கலே முக்கியமான காரணம்

## ✹ உள்ளக விசாரணையில் தெரிவிப்பு

பொலிஸ் படையை இராணுவ மய மாக்கியமை, போதிய அறிவின்மை, லஞ்சம், நல்லொழுக்கமின்மை ஆகியவையே சிறீலங்காப் பொலிசாரின் தரக்குறைவுக்கான காரணங்கள் என்று பொலிஸ் படை குறித்த உள்ளக விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.

பொலிஸ் மாஅதிபர் ஏனஸ் பெரேராவின் பணிப்புரையின் பேரில், பொலிசாரின் தரக்குறைவுக்கான காரணகாரியங்களை ஆராய்ந்த சிரேட்ட சுப்பிரன்டன் டொனால்ட் மெண்டிஸ் தனது அறிக்கையில் இவ்வாறு கூறியுள்ளார். கடந்த பத்து வருட காலப்பகுதியில் பொலிஸ் படையை இராணுவ மயமாக்கியதே பொலிசாரின் தரக்குறைவான நடத்தைக்கான பிரதான காரணம் என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

60,000 பேரைக் கொண்ட பொலிஸ் படை மனித உரிமைகள் மீறல், தன்னிச்சையான நடவடிக்கை, சட்டவிரோதச் செயல்கள், அரசியலில் தலையிடுதல் ஆகிய குற்றங்கள் சம்பந்தமாக, அண்மைக் காலங்களில் பத்திரிகைகள் மற்றும் சர்வதேச மனித நேய அமைப்புக்களால் குறை கூறப்பட்டது தெரிந்ததே.

பொலிஸ் படையில் நிலவும் ஒழுங்கீனம், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் பொலிசாரை ஊழல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தல், பொறுப்பதிகாரிகள் தமக்குக் கீழ் உள்ள பொலிசாரை வழி நடத்தத் தகுதியின்மை ஆகியவையே பொலிஸ் படையில் நிலவும் கீழ்ப்படிவின்மைக்குக் காரணமாகும் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது. பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளின் ஊழல்களை அவர்களுக்குக் கீழ் உள்ள சார்ஜண்டுகளும், சாதாரண பொலிசாரும் அம்பலப்படுத்திவிடுவார்கள் என்ற காரணத்தால் பொறுப்பதிகாரிகள் கீழ்ப்படிவற்ற பொலிசார் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது. ■

## அம்பாறையின் சில பகுதிகளை சிங்கள மாவட்டங்களுடன் இணைக்கத் திட்டம்

அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளை, சிங்கள மாவட்டங்களுடன் இணைக்க சிறீலங்கா அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளும் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் சென்றிருப்பதும், மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கும் களுவாஞ்சிக்குடி, பாலையடிவெட்டை, வெல்லாவெளி போன்ற தமிழ்க் கிராமத்தின் சில பகுதிகள் அம்பாறை மாவட்டத்திலுள்ள இராணுவத்தின் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டிருப்பதும் தெரிந்ததே.

அத்துடன், அம்மாவட்டத்தில் சிங்களவர்களைக் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் துரித கதியில் செயற்படுத்தப்படுகிறது எனவும் தெரியவருகிறது ■

## வல்வைக் கடற்பரப்பில் மீனவர் மீது தாக்கு

அண்மையில் வல்வெட்டித்துறைக் கடற்பரப்பில் சிறீலங்கா கடற்படையினர் மேற்கொண்ட பலத்த தாக்குதலினால் அப்பகுதி சில மணிநேரம் அதிர்ந்தது. கடற்பரப்பில் ரோந்து சென்ற சிறீலங்கா கடற்படையினர் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களைக் கண்டதும் தாக்குதலைத் தொடுத்தனர். இத் தாக்குதலுக்கு அஞ்சிய மீனவர்கள் சிலர், தமது மீன்பிடி வள்ளங்கள், வலைகள், எஞ்சின்களை விட்டு விட்டு நீந்திக் கரையை வந்தடைந்தனர். கடற்படையினரின் தாக்குதல்கள் ஓய்ந்ததும் பின்னர் சென்று தமது உடைமைகளை மீட்டனர். ■

# தனிச்சிங்களத்தில் தேர்தல் இடாப்பு

தமிழுக்கு அரச கரும மொழி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டபோதும், நடைபெற்றுள்ள மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு தயாரிக்கப்பட்ட தேர்தல் இடாப்பு முழுச் சிங்களத்திலேயே தயாரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதில் தபால் மூலம் வாக்களிப்பதற்குரியவிண்ணப்பப் பத்திரங்கள் கூட தனிச்சிங்களத்திலேயே இருந்ததாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சுதந்திரமான ஒரு தேர்தல் திணைக்களம் அரசகரும மொழியாக தமிழ் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதை அலட்சியம் செய்து விட்டு தமிழ் மொழியோ ஆங்கில மொழியோ இன்றித் தனிச்சிங்களத்தில் மட்டுமே காரியங்களை நடத்திவருவது குறிப்பிடத்தக்கது. ■

## மார்புநோய் நிலையம் நாவற்குழியில் அமையும்.

மயிலிட்டி மார்புநோய் சிகிச்சை நிலையம் நாவற்குழிக்கு மாற்றப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

மேற்படி மருத்துவமனை இராணுவப் பிடிக்குள் அகப்பட்டு செயலிழந்துள்ளது தெரிந்ததே. எனவே, இச் சிகிச்சை நிலையத்தை மீண்டும் வேறோர் இடத்தில் இயக்குவதற்கு யாழ் மாவட்ட சுகாதார திணைக்களத்தினர் பல தடவை கொழும்பில் சுகாதார அமைச்சு வட்டாரங்களிடம், இம்மருத்துவமனையின் அவசியம் பற்றி எடுத்து விளக்கிய பின்பே இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ். வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இவ் அதிகாரிகள் கொழும்பிலிருந்து குமண கப்பல் மூலம் குடாநாட்டுக்கு திரும்பியுள்ளதாகவும் மருத்துவமனைக்கு நாவற்குழி பகுதியில் உள்ள மூன்று வீடுகளை எடுத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இது இவ்வாறிருக்க, இம் மருத்துவ மனைக்குத் தேவையான தளபாடங்கள் அனைத்தும் மயிலிட்டி மருத்துவமனையில் சிக்குண்டுள்ளதால் கொழும்பிலிருந்து அடுத்து வரும் கப்பல் மூலம் தேவையான தளபாடங்கள் எடுத்து வரப்பட உள்ளதாகவும், அவை வந்ததும் ஒருசில மாதங்களில் இயங்கத் தொடங்குமென தெரியவருகின்றது. ■

## 7 சீன ஜெட் போர் விமானங்கள் சிறீலங்கா அரசு கொள்வனவு

[illegible] விமானப்படை ஏழு எஃப்-7 ரக சுப்பர் சோனிக் விமானங்களைக் கொள்வனவு செய்துள்ளது. சீனத் தயாரிப்பான இந்த ரக விமானங்கள் நான்கு ஏற்கனவே சிறீலங்கா விமானப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை இப்புதிய விமானங்களுடன் பயிற்சியாளர்களையும், பொறியியலாளர்களையும் வழங்க சீனா முன்வந்துள்ளது.

அதிவேகமாகப் பறந்து தாக்குதல் நடத்தக்கூடிய எஃப்-7 வடக்கில் போரிடும் படையினருக்குப் பெரிதும் உதவியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து சீன அரசுடன் நேரடியாகப் பேரம் பேசியதன் பேரில் சீனத் தயாரிப்பாளரிடம் இருந்து ஏழு எஃப்-7 விமானங்களை சிறீலங்கா விமானப்படை கொள்வனவு செய்துள்ளது என்று சிறீலங்கா விமானப்படை நடவடிக்கைப் பொறுப்பதிகாரி எயர் கொமடோர் ஆன்சலம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எதிரி இலக்குகள் மீது தாக்குதல் மேற்கொள்ள வடிவமைக்கப்பட்ட எஃப்-7 விமானம் சுமார் 1500 கிலோ எடையுள்ள வெடிமருந்துகளையும் போர்க்கருவிகளையும் கொண்டு பறக்கக்கூடியது. இந்த விமானத்தில் 30 எம்.எம் பீரங்கிகளும் இணைக்கப்பட்டுள்ளன.

சோவியத் தயாரிப்பான மிக்-21க்குச் சமதையான எஃப்-7 தாக்குதல் விமானம், ஒலியைவிட இருமடங்கு வேகமாகப் பறக்கக்கூடியது. இந்த விமானத்தின் ஆகக்கூடிய வேகம் மணித்தியாலம் ஒன்றுக்கு 2,400 கி.மீற்றர்களாகும். இலக்கு நோக்கித் தாக்கும் போது இதன் ஆகக்குறைந்த வேகம் 340 கி.மீ. ஆகும். சாதாரணமாக சராசரி ஒரு மணித்தியாலத்திற்கு 920 கி.மீ. வேகத்தில் பறக்கக் கூடியது.

எஃப்-7 விமானங்களை சிறீலங்கா விமானப்படையைச் சேர்ந்த இல.5 ஜெட் அணியைச் சேர்ந்த விமானிகள் கொழும்புக்கு ஓட்டி வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. ■

## இனப்பிரச்சனை தீர்வுக்கு சர்வதேச உதவி அவசியம்

### - ஜேர்மன் பா.உ. வலியுறுத்து

இலங்கையில் காணப்படும் இனப்பிரச்சனைக்கு தனித்து நின்று தீர்வு காணமுடியாது. சர்வதேச சமூகத்துடன் அவற்றை பரிமாறிக் கொள்ள வேண்டும் என ஜேர்மன் பாராளுமன்ற வெளிவிவகாரக் குழுத்தலைவரும் ஜேர்மன் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி கிளார்க்ஸன் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச பாராளுமன்ற சங்கத்தின் கௌரவத் தலைவராகவும் விளங்கும் இவர் அண்மையில் கொழும்புக்கு விஜயம் செய்தார். கொழும்பு 'கில்டன் கோட்டலில்' நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் பேசிய கலாநிதி கிளார்க்ஸன் இனப்பிரச்சனையை தீர்க்க தற்போது சிறப்பான சூழ்நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார். ■

## கிளாலியில் கைதானோர் பலாலியில் இல்லையாம்

கிளாலிக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட எவரும் பலாலி முகாமில் இல்லையெனத் தெரியவருகிறது.

கிளாலி கடல் நீரேரியில் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக இன்னமும் தெளிவான விபரமேதும் தெரியவரவில்லை.

பலாலியில் ஏனைய கடல் பரப்பிலும், இராணுவ நடவடிக்கைகளின்போதும் கைது செய்யப்பட்டவர்கள் மட்டுமே இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ■

### செஞ்சிலுவைச் சங்க அதிகாரி மரணம்

## கொழும்பு அலுவலகம் பூரண அறிக்கை தயாரிப்பு

யாழ் செஞ்சிலுவைச் சங்க உப தலைவர் திரு. க. புவனேந்திரன் சிறீலங்காப் படைகளின் தாக்குதலினால் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து அனைத்துத் தகவல்களையும் கொண்ட பூரண அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்புத் தலைமை அலுவலக செயலாற்றுப் பணிப்பாளர் திரு. தயாளதேவா யாழ்ப்பாணம் விஜயம் செய்து சம்பவம் நடைபெற்ற இடத்தைச் சென்று பார்வையிட்டார். அத்துடன் மரணமடைந்த உப தலைவருடன் கடமையில் இருந்த செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் மற்றும் ஏனைய செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் ஆகியோரையும் சந்தித்து நேரடித் தகவல்கள் பலவற்றையும் சேகரித்துக் கொண்டார்.

அத்துடன், யாழ் நகரில் இது சம்பந்தமாக நடத்தப்பட்ட கண்டனப் பேரணியையும் பார்வையிட்ட இவர், இச்சம்பவம் தொடர்பாக பூரண அறிக்கை ஒன்றைத் தயாரித்து இலங்கை செஞ்சிலுவைச் சங்க தலைமையகத்திற்குச் சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக, ஜெனிவாவில் உள்ள செஞ்சிலுவை, மற்றும் செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. ■

### செஞ்சிலுவை சங்க அதிகாரி மரணம்

## ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் உப தலைவர், சிறீலங்கா விமானப் படை விமானங்களின் தாக்குதலில் கொல்லப்பட்டதைக் கண்டித்து யாழ் நகரில் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

இக்கண்டனப் பேரணியில் பெருமளவு செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள், செண் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர், சாரணர், மக்கள் நலன்புரிச் சங்கத்தினர் மற்றும் பல அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் தங்களது சீருடையில் கலந்து கொண்டனர். கடந்த மாதம் பத்தாம் திகதி வல்லைப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கான அவசர உதவிகளை வழங்குவதற்கென இலங்கை செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் சீருடையுடன் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை, சிறீலங்கா விமானப்படையினர் திட்டமிட்டு மேற்கொண்ட தாக்குதலின்போது இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் உபதலைவர் திரு. புவனேந்திரன் பலியானது தெரிந்ததே.

நல்லூர் கந்தசாமி ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமான இக்கண்டனப் பேரணி, கோவில் வீதி வழியாகச் சென்று அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. அசோக்குமாரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தபின்னர் அங்கிருந்து நாவலர் வீதி, ராசாவின் தோட்ட வீதி வழியாக அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் திரு. கணேசலிங்கத்திடம் மகஜர் ஒன்றைக் கையளித்தது.

தொடர்ந்து நக்கா வீதியூடாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை வந்தடைந்தது. அங்கு வைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் வதிவிடப் பிரதிநிதியிடம் மகஜரைக் கையளித்த பின் தொடர்ந்து சென்று இறுதியாக யாழ் செயலகத்தைச் சென்றடைந்தது. அங்கு வைத்து யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் மகஜரைப் பெற்றுக் கொண்டார். ■

# விசாரணைக்கு எதிரான அரசாங்கத்தின் சதி?

மயிலந்தனையில் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 35 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதான வழக்கு விசாரணை பொலநறுவை மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி நீதிமன்றத்தில் அறிவித்துள்ளார்.

இவ்வழக்கு மட்டக்களப்பில் இருந்து, பொலநறுவை நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதானது, எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாது என்பதோடு, இவ்வழக்கை தோற்கடிப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள ஒரு சதி நடவடிக்கை என்றும் கூறலாம்.

இவ்வழக்கில், 23 இராணுவத்தினர் குற்றவாளிகள் என விசாரணையில் இருந்து கண்டறியப்பட்ட பின்னரே மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கில், எதிரிகள் யாவரும் சிங்கள இராணுவத்தினர். பிரதிவாதிகள் யாவரும் அப்பாவித் தமிழ் பொதுமக்கள் ஆகும்.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து வழக்கை பொலநறுவை மாவட்டத்திற்கு மாற்றுவதென்பது பிரதிவாதிகளை அச்சுறுத்தும் ஒரு வகை நடவடிக்கையே ஆகும். மயிலந்தனையில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக ஏற்கனவே அச்சத்தின் காரணமாக சாட்சியமளிக்க பலர் முன்வரவில்லை. பலர் இதுபற்றி பேசவே அஞ்சுகின்றனர். இதற்கு சிங்கள இராணுவத்தினரால் பழிவாங்கப்படுவோம் என்ற அச்சமே காரணமாகும்.

இவ்வாறான மக்களுக்கு, அச்சம் ஏற்படுவதிலும் நியாயங்கள் உண்டு. கடந்த காலத்தில், இராணுவத்தினருக்கு எதிராக சாட்சியமளிக்க முற்பட்டவர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டுமுள்ளனர். கிழக்கில் நடந்த படுகொலை ஒன்று குறித்து சாட்சியமளிக்கவென தகவல் திரட்டிய கிராமசேவகர் ஒருவர் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டமை சகலரும் அறிந்ததே.

இதேவேளை, மயிலந்தனைப் படுகொலையை இராணுவத்தினரே மேற்கொண்டனர் என்ற விசாரணை முடிவை அரசாங்கம் விரும்பி வெளியிட்டதொன்று அல்ல. கடந்த காலப்படுகொலைகளை மூடி மறைக்க முற்பட்டதுபோலவே, இப்படுகொலையையும் மூடிமறைக்கவே அரசாங்கம் விரும்பியது. ஆனால், அது மூடிமறைக்க முடியாமல் சாட்சியங்களுடன் நிரூபிக்கப்பட்டதினாலும், சர்வதேச அழுத்தங்களின் காரணத்தினாலுமே அரசாங்கம் இதை வெளியிட்டது.

இந்நிலையில், தற்பொழுது படுகொலை புரிந்த இராணுவத்தினரைப் பாதுகாக்கும் முகமாகவே பொலநறுவைக்கு விசாரணையை மாற்றம் செய்துள்ளது. இதன்மூலம் சாட்சியங்களை நீதிமன்றத்திற்குச் செல்லவிடாமல் தடுத்துவிடலாம் என அரசாங்கம் எண்ணுகிறது.

சிறீலங்கா அரசாங்கத்தின் இந் நடவடிக்கையானது, உலகத்தின் கண்ணில் மண்ணைத் தூவும் நடவடிக்கைக்கு ஒப்பானதாகும். அண்மைக் காலத்தில் சிறீலங்கா அரசாங்கம் புரியும் இனப்படுகொலையை நிறுத்துமாறும், புரிந்த படுகொலைகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் நிர்ப்பந்தங்கள் அதிகரித்துள்ளன. இவை, சிறீலங்கா அரசாங்கத்திற்கு உலக நாடுகள், உலக நிதி நிறுவனங்கள் வழங்கும் நிதி உதவிகளுடன் ஓரளவிற்குத் தொடர்புபடுத்தப்பட்டு வருகின்றமையினால், இவை குறித்து முற்றாக சிறீலங்கா அரசாங்கத்தால் புறந்தள்ளிவிட முடியாத நிலை உள்ளது. இந்நிலையில், விசாரணைகள் நடத்தப்படும்போது தமது ஏவலினால், படுகொலை புரிந்த இராணுவத்தினரை முற்றாக அரசாங்கத்தினால் பாதுகாக்க முடியாத நிலை உருவாகிவிடுகின்றது.

இவ்வாறானதொரு நிலைதான், தற்போது மயிலந்தனைப் படுகொலை புரிந்த இராணுவத்தினர் குறித்தும் ஏற்பட்டுள்ளது. இதில், இராணுவத்தினருக்கு தண்டனை ஏதும் கிடைக்குமானால், இது சிங்கள இராணுவத்தினரை அரசாங்கத்திற்கு எதிராக திருப்பிவிடக்கூடிய ஒன்றாக அமைந்துவிடும். இந்நிலையிலேயே, அரசாங்கம் பொலநறுவைக்கு நீதிமன்றத்தை மாற்றுவதன் மூலம் பிரதிவாதிகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி, மிரட்டி அவர்களை வழக்கில் இருந்து ஒதுங்கவைத்து இராணுவத்தைப் பாதுகாக்க முற்படுகிறது.

அதாவது, உலகிற்கு நீதி விசாரணையை அரசு மேற்கொண்டதாகக் காட்டிக் கொள்ளும் அதேவேளை, இராணுவத்தினருக்கு தண்டனை ஏதும் கிடைக்காமல் பார்த்துக் கொள்வதில் அரசாங்கம் தீவிர அக்கறை செலுத்துகின்றது. இவ்வாறான, அரசாங்கத்தின் சதிநாடகத்தை சர்வதேசமும் தமிழ்மக்களும் புரிந்து கொள்ள வேண்டும். ■

## குடாக்கடலில் மீனவர் மீது துப்பாக்கி பிரயோகம்

பூநகரி கல்முனைப் பகுதியில் நிலை கொண்டிருக்கும் சிறீலங்கா படையினர், அரியாலை தெற்கு பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி இடையிடையே துப்பாக்கி பிரயோகங்களை மேற்கொண்டனர். இதனால் மீனவர்கள் தமது தொழிலை இடை நடுவே விட்டுவிட்டு கரை சேர்ந்தனர். சேத விபரங்கள் தெரியவில்லை.

கடந்த சிலநாட்களாக இரவு வேளைகளில் இக்குடாக்கடல் கரையோரங்களை நோக்கி சிறீலங்கா கடற்படையினர் பீரங்கி வேட்டுக்களை தீர்ப்பதும் காலை மாலை நேரங்களில் கடற்பிராந்தியங்களில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்கள் மீது கல்முனை, மண்டதீவுப் பகுதியிலிருந்து துப்பாக்கி பிரயோகம் செய்வதும் நடைபெற்று வருவதால் இப்பகுதி மக்களிடையே பதட்டத்தை காண முடிவதுடன், மீனவர்களும் தொழிலின்மையால் பெரிதும் பாதிக்கப் பட்டிருப்பதை அறிய முடிகிறது. ■

## மாபெரும் விருட்சமாக போராட்டம் வளர்ந்துள்ளது

இரண்டு தசாப்தங்களை கடந்து இந்த விடுதலைப் போராட்டம் மாபெரும் விருட்சமாக வளர்ந்துள்ளது. உலகளாவிய ரீதியில், தமிழீழ விடுதலைப் போராட்டம் ஒருவளர்ச்சி அடைந்த இயக்கமாக வளர்ந்து உள்ளது.

இவ்வாறு, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவின்துணைப் பொறுப்பாளர் கரிகாலன், பருத்தித்துறை தும்பளையில் இடம்பெற்ற அன்னை பூபதி நினைவு, நிகழ்வு, மற்றும் மார்ச், ஏப்பிரல் மாதங்களில் வீரச்சாவை தழுவிக் கொண்ட திருமலை மாவட்ட மாவீரர்களின் வீரவணக்க கூட்டம் ஆகியவற்றில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் பைந்தமிழன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் மூத்த உறுப்பினர் தேவர், பெண்கள் புனர்வாழ்வு பொறுப்பாளர் மாலினி, திருமலை தொடர்பகத்தைச் சேர்ந்த வாகீசன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

திரு கரிகாலன் இங்கு மேலும் கூறுகையில், 5000க்கு மேற்பட்ட மாவீரர்கள் தம்முயிரை தற்கொடையாக்கி இப்போராட்டத்தை வளர்த்துள்ளனர். ஆனால் இப்போராட்டத்திற்கு வெளியே பார்வையாளர்களாக இருந்து 5000 பேருக்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் மடிந்துள்ளனர். இந்தப் போராட்டத்தில் இணைந்துகொண்டுள்ளோர் தங்கள் ஆயுதங்களால் தங்களினதும், மக்களினதும் உயிரைப்பாதுகாத்துக் கொண்டுள்ளனர் எனவும் தெரிவித்தார். ■

## கஸ்டங்கள் மத்தியில் பயில்வோருக்கு உரியவாய்ப்பளிக்க ஏற்பாடு தேவை

### யாழ். மாணவன் மனு மீதான தீர்ப்பில் தெரிவிப்பு

"கஸ்டங்களுக்கு மத்தியில் படிக்கும் மாணவருக்கு இடம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் பட்சத்தில், மேலும் சரிப்படுத்தல்களை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும்.

வாய்ப்புக்களிலும், கல்வி வசதிகளிலும் உள்ள சமமற்ற தன்மையைக் குறைப்பதன் மூலமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமே ஒழிய, தன்னிச்சையான முறையில் கோட்டாவைத் திணிப்பதன் மூலம் அல்ல"

பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக, யாழ். இந்துக் கல்லூரி மாணவரான ராஜதுரை சுரேந்திரன் உயர்நீதிமன்றத்தில் தாக்குதல் செய்த மனித உரிமைமீறல் மனுமீது உயர்நீதிமன்ற நீதியரசர்கள் வழங்கிய தீர்ப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதியரசர் மார்க் பெர்னாண்டோ தலைமையிலான மூன்று நீதியரசர்களைக்கொண்ட உயர் நீதிமன்றம் கடந்த மாதம் 26 ஆம் திகதி தீர்ப்பு வழங்கியிருந்தது. உயர் நீதிமன்ற தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

புலமையில் அடிப்படையில் திறமைக் கோட்டாவின் உப பிரிவு மூலம் சமத்துவம் தொடர்பான மனுதாரரின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது.

முதலாவது, பிரதிவாதியான பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் முடிவு, சட்டப்படி பிழையானது மட்டுமல்ல, அந்த முடிவு பூரணத்துவமற்ற புள்ளிவிபர தரவுகளில் இருந்து பிழையான முறையில் எடுக்கப்பட்ட அனுமானங்களை அடிப்படையாகக் கொண்டதுமாகும்.

### உரிமை மறுப்பு

பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறைக்கு மனுதாரர் அனுமதிக்கப்பட்டிருக்கவேண்டும் என்பது தெளிவாகிறது. மனுதாரரின் நிலையில் உள்ள, இந்த நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்காதவர்களின் அடிப்படை உரிமைகளும் மீறப்பட்டுள்ளன என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

அண்மைக்கால சமூக, மற்றும் அரசியல் ரீதியில் நிலவும் அமைதியின்மை நியாயமற்ற பல்கலைக்கழக அனுமதிகளுக்கு ஒரு காலாக இருந்தது என்பது நன்கு தெரிந்த விசயமாகும்.

இதற்கு முன்னர், ஒரு வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பு, ஆகஸ்ட் மற்றும் ஏப்ரல் பரீட்சைகள் குறித்து பாரபட்சம் காட்டப்படக்கூடாது என்ற முடிவை எடுக்க நீதிமன்றத்தை நிர்ப்பந்தித்துள்ளது.

ஏப்ரல் பரீட்சைக்குத் தயார் செய்ய பரீட்சார்த்திகளுக்கு மேலும் 8 மாதங்கள் கிடைத்தன என்பது பாரபட்ச நடவடிக்கையை நியாயப்படுத்துவதற்கான அடிப்படையாக எடுத்துக் கொள்ளமுடியாது.

எனினும் - மனுதாரரான மாணவர் தாம் [illegible] பரீட்சைக்குத் தயார் செய்யவேண்டியிருந்ததாகக் கூறியுள்ளார்.

இப்படியான கஸ்டங்களுக்கு மத்தியில் படிக்கும் மாணவருக்கு இடம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் பட்சத்தில், மேலும் சில சரிப்படுத்தல்களை (Adjustments) செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும்.

வாய்ப்புக்களிலும், கல்வி வசதிகளிலும் உள்ள சமமற்ற தன்மையைக் குறைப்பதன் மூலமே இந்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமே ஒழிய, தன்னிச்சையான முறையில் கோட்டாவைத் திணிப்பதன் மூலம் அல்ல.

பிரதிவாதிகள் தங்களுக்கு ஆதாரமாகச் சமர்ப்பித்த ஆவணங்கள் அவர்களின் கூற்றுக்களை ஆதரிக்கவில்லை.

நீதிமன்றத்தை வெற்றி கொள்ள வேண்டும் என்ற முயற்சியாக சமர்ப்பிக்கப்பட்ட பல ஆவணங்களில் இருந்து வெறும் புள்ளி விபர தகவல்கள் குறித்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு முறையான பகுப்பாய்வு நடத்தவில்லை.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு கடைப்பிடித்த நடைமுறைகளில், பல காரணங்களுக்காக பாரதூரமான குறைகள் காணப்பட்டன.

### அனுமதி முறை

தற்போதைய பல்கலைக்கழக அனுமதி முறை பூரணமாக ரத்துச் செய்யப்பட வேண்டும். உயர் கல்வித் துறையில் பல்கலைக்கழக அனுமதி குறித்து வகுக்கப்பட்டு அமுல் நடத்தப்படும் அனுமதி முறை நியாயமானதாக இருப்பதுடன், அது நியாயமானதாகவும் மக்களுக்கு காட்டப்பட வேண்டும்.

இப்படி தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

### பத்திரிகைகளில் முக்கிய இடம்.

பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக, யாழ். மாணவன் தாக்கல் செய்த வழக்கில் உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை கொழும்புச் சிங்களப் பத்திரிகைகள் பெரும் முக்கியத்துவம் அளித்து பிரசுரித்து இருந்தன. உயர் நீதிமன்றத் தீர்ப்பு 'திவயின' 'லங்கா தீப' பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகளாகப் பிரசுரிக்கப் பட்டிருந்தன. ■

## மீட்கப்பட்ட மண்டைஓடுகளில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள்

அண்மையில் சாவகச்சேரி நவீன சந்தைக்கு முன்பாக குழி ஒன்றை தோண்டியபோது, அதிலிருந்து அறுவரின் மண்டையோடுகள் மீட்கப்பட்டன. இம்மண்டையோடுகளில் சிலவற்றில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மக்களினது மண்டை ஓடுகளே இவையாக இருக்கலாம் என்பதை இவை ஊர்ஜிதப்படுத்துகின்றன. இம்மனித மண்டையோடுகள் மூன்று இளம்பெண்களுடையதும், ஒரு சிறுமியினதும், இரு பாடசாலை சிறுவர்களினதும் என அறியப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. ■

### 68 ஆயிரம் மக்கள் மட்டக்களப்பில் அகதிகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 68,411 பேர் இன்னமும் அகதிகளாக இருப்பதாக அரசாங்க சார்பு புள்ளிவிபரங்கள் மூலம் தெரியவருகின்றது. 16,490 குடும்பங்களைச் சேர்ந்த இவர்கள் இருபது முகாம்களில் வைத்து பராமரிக்கப்படுவதாகவும் மேலும் கூறப்படுகிறது. ■

### மோட்டார் ஊர்தி பதிவுச் செயலகம் திறப்புவிழா

தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தை யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பருதி கோண்டாவிலில் திறந்து வைத்தார். மோட்டார் ஊர்திகளைப் பதிவுசெய்யும் வேலைகள் ஆரம்பமாகிவிட்டதென்பதை போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் மோட்டார் ஊர்தி உரிமையாளருக்கு அறிவித்து வருகின்றனர். ■

# கிளாலி கடக்க அனுமதியில்லை சிங்கள அரசின் நோக்கம் என்ன?

'கிளாலி கடல்நீரேரி தடை செய்யப்பட்ட வலயமாக்கப்பட்டுள்ளது. இக் கடற்பாதையால் எவரும் போக்குவரத்துச் செய்ய முடியாது. இதனை மீறிச் செல்வோர் சுடப்படுவர்' என, சிறீ லங்கா அரசு சட்டமியற்றியுள்ளது.

யாழ். குடாநாட்டுக்குள் போகவும் வரவும் இருந்த எல்லா வழிகளையும் இராணுவம் தடுத்து நிற்பதால், வேறு மார்க்கம் எதுவுமின்றி கிளாலிப் பாதையூடாக மக்கள் பயணிக்கத் தொடங்கியபோது, இந்தத் தடையுத்தரவு சிங்கள அரசால் பிரகடனப்படுத்தப்பட்டது. ஆனாலும், புலிகள் இயக்கம் பாதுகாப்பு வழங்க கடற்பயணம் தொடர்கின்றது. இருந்தாலும் அரசின் இந்தத் தடையுத்தரவையும் மீறி, கொழும்பு அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ அவர்கள், கிளாலியூடாகத் துணிகரமாக யாழ்ப்பாணம் சென்று திரும்பினார். கிளிநொச்சிக்கு அப்பால் செல்லத் தனக்கு அனுமதியளிக்கப்படாத நிலையிலும், அவர் யாழ்ப்பாணம் சென்று வந்தமை, கொழும்பு ஆட்சி பீடத்தினரையும் பௌத்த பேரினவாதத்தினரையும் சீற்றமடையச் செய்தது. அவர்களின் சீற்றத்திற்குக் காரணம் சிங்கள அரசின் தடைச்சட்டத்தை மீறியமையல்ல.

தமிழர்களின் துயரங்களை, வெளியுலகத்திற்குச் சொன்னதுடன், தலைவர் பிரபாகரன் அவர்களைச் சந்தித்துவிட்டு வந்து, அவரது சமாதான நல்லெண்ண முயற்சிகளை வெளிப்படுத்தி, அவரது நேர்மையையும் கண்ணியத்தையும் வியந்து பாராட்டி, மனந்திறந்து கூறிவிட்டார் என்பதுவே உண்மைக் காரணமாகும்.

ஆயர் அவர்களின் பயண அனுபவமும், அவர் கூறிய வியப்பு மிக்க கதைகளும், தலைவர் பிரபாகரனின் சமாதான நல்லெண்ண சமிக்ஞை பற்றிய செய்திகளும், வெளிநாட்டுத் தகவல் துறை நிறுவனங்களினாலும், கொழும்பில் சில ஏடுகளினாலும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வெளியிடப்பட்டன.

இதனால், ஆத்திரமடைந்த சிங்களப் பேரினவாதிகள், 'தடை செய்யப்பட்ட கிளாலிப் பாதையூடாகச் சென்றதற்காக ஆயர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்' எனக் கூச்சல் போட்டனர்.

பி.பி.சி. வானொலியின் தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் திருமதி ஆனந்தி அவர்கள், அதன் கொழும்பு முகவர் சியாக்கா நூக அவர்களுடன் அண்மையில் வடபகுதி வர, கூட்டுப்படைத் தலைமையிடம் அனுமதி கோரினார். ஆயர் அவர்களைப் போல, கிளிநொச்சி வரை 'மாத்திரம்'செல்ல அவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

ஆனால், கிளாலி கடற்பாதையூடாக யாழ்ப்பாணம் சென்ற அவர்கள், யாரும் எதிர்பாராத வகையில் தலைவர் பிரபாகரன் அவர்களைச் சந்தித்து, அரசியல் முக்கியத்துவம் மிக்க செவ்வியைப் பெற்றனர். வடக்கின் பல பகுதிகளுக்கும் சென்று, மக்களில் பலதரப்பட்டவர்களையும் சந்தித்துவிட்டுத் திரும்பினர்.

தலைவரின் செவ்வி பி.பி.சி.ன் அனைத்துச் சேவைகளிலும் ஒலிபரப்பப்பட்டது. உலகின் செய்தி நிறுவனங்களிலெல்லாம் அதற்குப் பெரும் முக்கியத்துவம் கொடுத்தன. புலிகளின் அரசியல் நிலைப்பாட்டினையும், அதற்குத் தலைவர் கொடுத்த தெளிவான விளக்கங்களையும் பி.பி.சி. உலகமெங்கும் பரப்பியது.

இச் சூழ்நிலைகளிலேயே, உலக மக்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் நிகழ்ச்சி மூலம் பிரேமதாசா அவர்களையும் செவ்வி கண்டது.

இவ்விரு செவ்விகளையும், பி.பி.சி. குறுகிய காலத்தில் அடுத்தடுத்து ஒலிபரப்பியதால், தமிழரின் தேசிய இனப்பிரச்சனை தொடர்பாக புலிகளினதும் சிங்கள அரசினதும் அரசியல் நிலைப்பாட்டினை மக்கள் கேட்டறிந்தனர். இதன்மூலம், இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில், யார் தடைக்கல்லைப் போடுகிறார்கள் என்பதனையும் உலகம் கண்டுகொண்டது.


ஆனந்தி அவர்கள் பி.பி.சி.ன் ஆங்கில சேவையில், 'ஆச்சரியம் மிக்க' தமிழர்களின் சோகக் கதைகளை உணர்வு பூர்வமாக விபரித்தார். அதேபோல, 'வடபுலம் சென்றேன், கண்டேன்' என்ற ஒரு தொடர் விவரணத்தை தமிழ்ச் சேவையில் நிகழ்த்தினார்.

தமிழீழத்தின் உண்மை வாழ்வையும், சிங்கள அரசின் சுயரூபத்தையும் பி.பி.சி. உலகின் முன் வெளிச்சமாக்கியதால், அதன்மீது சிங்கள அரசு கடுஞ்சினம் கொண்டிருந்தது.

அங்கிலிக்கன் ஆயர் அவர்களையும், பி.பி.சி.யின் ஆட்களையும் வடபகுதி செல்ல அனுமதித்ததன் விளைவாக தான் பெற்ற தீங்கையும் -தான் சந்திக்க வேண்டியிருந்த சிக்கலையும் சிங்கள அரசு மறந்து போகாது. இப்படியான ஒரு சூழ்நிலையில்

டென்மார்க் 'தொலைக்காட்சிக் குழு' ஒன்று வடபகுதி செல்ல விரும்பியது. வழமை போல 'கிளிநொச்சி வரை மட்டுமே' எனக் கூட்டுப்படை அனுமதி வழங்கியது. அவர்களுடன் கூடவே பி.பி.சி.யின் கொழும்பு முகவர் சியாக்கா நூக அவர்களும் வந்தார். அவர்களை வவுனியாவைக் கடந்து செல்லவிடாது படையினர் தடுத்தனர். கூட்டுப்படைத் தலைமை வழங்கிய அனுமதிப்பத்திரத்தை செய்தியாளர் காட்டியபோதும், பயணம் தடுக்கப்பட்டது. கூட்டுப்படைத் தலைமையிடம் விளக்கம் கேட்கப்பட்டபோது, 'பி.பி.சி. செய்தியாளரை அனுமதிக்க முடியாது. அவரைத் தவிர்ப்பதாயின் ஏனையவர்கள் போகலாம்' என்ற நிபந்தனை, பதிலாக வந்தது. அதன்படி சியாக்கா நூக அவர்கள் கொழும்பு திரும்ப, டென்மார்க் குழு கிளிநொச்சி வந்தது.

தமிழர்களின் அவல வாழ்வையும், புலிகளின் நியாயமான அரசியல் நிலைப்பாட்டினையும், சிங்கள அரசின் பித்தலாட்டங்களையும் சர்வதேச அரங்கில் வெளிக்காட்டியதற்காக பி.பி.சி.க்கு வழங்கப்பட்ட பதிலடியாகவே இது இருக்கும். இதே சமயத்தில் -அங்கிலிக்கன் ஆயர் அவர்கள் திரும்பவும் யாழ்ப்பாணம் வர முயற்சி எடுக்கின்றார். அவரது முயற்சியினைக் குழப்பும்



முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன. முன்னர் அவர் யாழ்ப்பாணம் சென்றபோது அங்கு கூறிவிட்டு வந்ததுபோல -சர்வமதப் பெரியார்களையும் அழைத்துக் கொண்டு யாழ்ப்பாணம் போக வேண்டும் என்ற அவரது நல்ல முயற்சிக்கு, பேரினவாதிகளிடமிருந்து ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை.

அங்கிலிக்கன் ஆயர் மீண்டும் இங்கு வந்து, தலைவர் பிரபாகரனை சந்திக்காது தடுப்பதில் ஆட்சியாளர்களும் பேரினவாதிகளும் தீவிரமாக இருக்கிறார்கள்.

இங்கே இன்னொரு விடயமும் உண்டு. வடக்கே செல்ல முயலும் செய்தியாளர்களுக்கும் பிரபல்யமான [illegible]களுக்கும் குடா நாட்டுக்குள் செல்ல அரசினால் அனுமதி வழங்கப்படுவதில்லை. இதற்கொரு காரணத்தையும் அது சொல்கிறது. "யாழ்ப்பாணம் செல்ல பாதுகாப்பான பாதைகள் எதுவுமில்லை. புலிகள் போக்குவரத்து செய்வதால் கிளாலி கடற்பாதையும் தடை செய்யப்பட்டுள்ளது. அதனால் கிளிநொச்சியுடன் திரும்பிவிடுவதே உங்களுக்கு நல்லது" என்பதுதான் அது. ஆனால், உண்மையில் அதற்கு இரண்டுவிதமான காரணிகள் உண்டு.

முதலாவது காரணம் - யாழ்ப்பாணம் செல்கின்ற செய்தியாளர்களும் முக்கிய ஆட்களும் புலிகளின் உயர்மட்ட பிரதிநிதிகளை - சில சமயம் தலைவர் பிரபாகரனையே -சந்தித்து விடுகிறார்கள். அதனால், இனப்பிரச்சினைக்கு உருப்படியான தீர்வொன்றைக்காண புலிகள் காட்டும் ஆர்வத்தையும், புலிகளின் சரியான -தெளிவான அரசியல் நிலைப்பாட்டினையும் பற்றி அவர்கள் சர்வதேச அரங்கில் வெளிப்படுத்திவிடுகின்றனர்.

இரண்டாவது காரணம் - குடாநாட்டிற்குள் செல்கின்ற எவரும் தமிழர்கள் மீதான ஒடுக்குமுறையின் உச்ச வடிவத்தைக் கண்டுவிடுவார்கள். அதன்மூலம் சிங்கள அரசின் கொடூர அடக்குமுறையை உலகமும் கண்டுவிடும் என்ற அச்சம்.

மனித இரை தின்ன அலைந்து திரியும் இயந்திர சுறாக்களுகளும், வானில் வட்டமிடும் இயந்திரக் கழுகுகளிற்கும் மத்தியில் இலட்சக்கணக்கான மக்கள் உயிரைப் பணயம் வைத்து செய்யும் கடற் பயணத்தை, அவர்கள் வெளியில் சொல்வார்கள். அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையில், அன்றாடம் சீவிக்கவே அல்லலுறும் மக்களின் வாழ்வை பற்றிய தகவல்களை, அவர்கள் வெளிப்படுத்துவார்கள். இவ்வளவு நெருக்கடிகளுக்கு உள்ளாகிய போதும், போராட்டத்தில் உறுதி கொண்டு, மக்கள் புலிகளின் பின்னால் அணிதிரண்டு நிற்பதை, அவர்கள் வெளிப்படுத்துவார்கள். இவ்வாறாக, உண்மை விபரங்களை, வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் சர்வதேச மட்டத்தில் வெளிச்சத்திற்கு கொண்டுவரும். இது தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு சர்வதேச அனுதாபத்தைத் தேடிக் கொடுத்துவிடும் என்பதுடன், சிங்கள அரசையும் சிக்கலில் மாட்டி வைத்துவிடும் என, ஆட்சியாளர்கள் அஞ்சுகின்றனர்.

மேலே நாம் பார்த்தது - கிளிநொச்சிக்கு அப்பால் செல்ல அரசு அனுமதி அளிக்காததன் காரணங்கள். கிளிநொச்சிவரை செல்வதற்கென்றாலும் அரசு அனுமதிப்பதற்கும் ஒரு காரணம் உண்டு. 'வடக்கே செல்லும் யாராவது ஒரு வெளிநாட்டு செய்தியாளர் -யாழ்ப்பாணம் போகாமல் -அரைகுறைத் தகவல்களை பெற்றுச் சென்று புலிகளுக்கு எதிராக ஏதாவது சொல்ல மாட்டாரா' என, சிங்கள அரசு படும் ஆதங்கம் தான் அது.

அதனால் தான் நிலைமையின் ஆழ -அகலத்தைச் சரிவரப் புரிந்து கொண்டு உண்மைத் தகவல்களை வெளியிட்டவர்களுக்குப் பயணத்தடங்கல்களை ஏற்படுத்திக் கொண்டு, புதியவர்களுக்கு மாத்திரம் 'கிளிநொச்சி வரை' என அனுமதியளிக்கிறது. அந்த வகையில், டென்மார்க் தொலைக்காட்சிக் குழு, வழமை போல் இதுவும் கிளாலியூடாக யாழ்ப்பாணம் வந்தது. இவர்களும் தமிழர்களின் இன்னல்களை, அவர்களின் போராட்ட நியாயப்பாட்டை, அவர்களின் சரியான -தெளிவான -அரசியல் நிலைப்பாட்டை வெளி உலகிற்கு சொன்னால், அதாவது உண்மைத்தன்மை பிசகாமல் தகவல்களை வெளியிட்டால், அடுத்த தடவை வவுனியாவோடு திரும்ப வேண்டி ஏற்படலாம். இதனை, டென்மார்க் தொலைக்காட்சிக் குழுவினரும் புரிந்து கொள்ள, பி.பி.சி. நிருபருக்கு ஏற்பட்ட அனுபவம் உதவும் என்றே நம்பலாம்.

ஆனால், கிளாலிக் கடல் நீரேரியூடான பயணத்தைத் தடுப்பதற்கான சிங்கள அரசின் உண்மைக் காரணங்களை, [illegible] தடுப்பதன் மூலம், சர்வதேச சமூகத்தின் கண்முன் நீண்ட காலத்திற்கு மூடிமறைக்க முடியாது. ■

நன்றி-
விடுதலைப் புலிகள்



# அதிர்வு

சிறுகதை

சாந்தன்

காலையில் திறந்த நேரத்திலிருந்து கடையில் வியாபாரமும் அதிகமில்லை.

வழமையிலும் பார்க்க தெருவில் போக்குவரத்து அதிகரித்திருந்தது. பயமும் பரபரப்பும் பதட்டமுமாய்ச் சனங்கள்.....

வடக்கே வெடிக்கும் குண்டுகளும் வானில் உறுமல்களுமாய். விறகும் பிரச்சனை! கொஞ்ச நாட்கள் நிலவியிருந்த சாதாரண நிலை மாறி விட்டது...!

சாதாரணம்! எது சாதாரணம்? எது அசாதாரணம்? -பொன்னையனுக்கு சிரிப்பு வந்தது.

போகிற போக்கில் மத்தியானத்துடன் கடையைப் பூட்ட வேண்டும் போலிருக்கு.

இடைக்கிடை மோட்டார் சைக்கிள்களும் போகின்றன. மண்ணெண்ணைப் புகை வந்து மூக்கில் படுகிறது. ஒன்றில் ஆறு பேர்-குஞ்சு குழந்தைகளுடன் சேர்த்து. இதுகளைக் கண்டாலும் 'கெலி'க்காரன் அடிப்பானா?

பெரிய பாதையால் போகிற வாகனங்களைக் கலைத்து, 'கெலி'கள் வேட்டுக்களைப் பொழிவது வடிவாய்க் கேட்கிறது. இது, கொஞ்சம் அடக்கமான பாதை. என்றாலும், ஒதுக்கு என்று சொல்லிவிட முடியாது...

அநேகமான சாமான்களை விசாரித்தாவது பார்க்கக் கூடியதாக எட்டுப் பத்துக் கடைகள் இந்த இடத்தில். தொங்கலில் பொன்னையரின் கடை. அயலில் ஐந்தாறு பெரு மரங்கள், தெருவோடு. அந்த மறைவு கெலிக்காரன் கண்ணிலிருந்து காப்பாற்றும் என்றொரு நம்பிக்கை...

ஒரு சைக்கிளில் ஒரு இளைஞனும் ஒரு சிறுவனும் வேகமாகப் போகிறார்கள். பின்னால் ஒரு பெரிய பெட்டி. கட்டுச் சரியில்லாததால் வழுவி ஒரு பக்கம் இழுவுண்டு கிடந்தது. விழுமோ? கூப்பிட்டுச் சொல்லலாமா? சைக்கிள், கடையைத் தாண்டி விரைவாய்ப் போய் விட்டது.

சற்றுத் தள்ளி வட்டமிட்டுக் கொண்டிருந்த கெலி இப்போ கிட்ட வருவதாகப் படுகிறது...

திடீரென மோகன் எங்கிருந்தோ அவசரமாய்ச் சைக்கிளில் வந்து கடைப்படியில் கால் தேய ஊன்றி நிறுத்தினான்.

"இங்கதான் வாறான்..." என்றபடி அவதியுடன் சைக்கிளைத் தூக்கி விறாந்தையில் விட்டான்.

தெருவில் போனவர்களும் சடசடவென்று பயந்து ஒடுங்கி.... கெலி கிட்டப் பதிவது கேட்கிறது.

பொன்னையர், லாச்சியைப் பூட்டித் திறப்பை எடுத்தார். முக்காலியைப் பின்னால் தள்ளினார். மேசையடியில் புகுந்து கொண்டால் சுட்டாலும் பயமில்லை..... 'மேலே வடிவாய் ஏறி நில்.. சைக்கிளையுந் தள்ளி விடு..'

தெருவில் இரண்டு பேர் அவசர அவசரமாக ஓடி மறைவது தெரிகிறது. எங்கே போகிறார்கள். கெலி இப்போது வலு கிட்ட.

கண்ணாடி போட்டிருக்கிற ஒரு தடியன், சைக்கிளைத் தெருவின் எதிர்ப்பக்க மதிலோடு சாத்தியதும் சாத்தாதுமாகப் போட்டுவிட்டு குதித்து, சில்லுக்கட்டி விட்டிருந்த சேனாதியின் வண்டிலுக்கும் மதிலுக்குமிடையில் அவசரமாய்க் குந்திப் பதுங்குவது தெரிகிறது. இந்த நேரத்தில் காற்சட்டை, சேட்டு ஊத்தை யாவதைப் பார்க்க முடியாதுதான்...

சேனாதி, காலையில் வந்த கையோடு மாடுகளை இந்தக் கடை வரிசைகளுக்குப் பின்னால் தள்ளியருக்கிற வெறும் வளவுக்குள் மேய விட்டு விட்டு, வாடிக்கை ஏதும் வரும்வரையில் தேவுவின் தேத்தண்ணிக் கடை வாங்கிலிருப்பது வழமை.

கெலி விலகிப் போவது மாதிரி. ஆனால், இப்போது அதென்ன, கூட? இன்னொன்று?

திடீரென ஒரு காக்கி நிற வாகனம் விரைந்து வந்து, சடாரென்று பிரேக் பிடித்து வண்டிலின் முன்னால் வெட்டியொதுங்கி நின்றது.

பெடியள்!

பொன்னையருக்கு.....
எட, எப்பன் முன்னை பின்னையாவது நிப்பாட்டியிருக்கலாம்...

கெலி, போகிறதா, வருகிறதா சத்தத்தை வைத்துக்கொண்டு சொல்ல முடியவில்லை• முக்காலியை இன்னும் தள்ளிவிட்டு மேசைக்கடியில் குந்தினார். முன்னால் நின்ற மோகன் பாண் அலுமாரிக்கும், சுவர் றாக்கைக்கும் இடையில் பதுங்கியபடி கூரையைப் பார்ப்பது தெரிகிறது.... ஓட்டுக்கூரை.

சத்தம் விலகிப் போகிறது. பொன்னையர், தலையை இடித்துக் கொள்ளாமல் எழுந்தார்.

அந்த வாகனத்தை ஓட்டிவந்த பெடியன் இறங்கி, அதன் முன் கதவைப் பிடித்துக்கொண்டு நின்றான். அருகிலிருப்பவன் இறங்காமலிருப்பது தெரிகிறது.

"தம்பி, இதில கொண்டாந்து நிப்பாட்டினா?...."

பொன்னையர் இங்கிருந்து கேட்கிறார். குரலில் ஒலித்தது கோபமா, முறைப்பாடா?

"கோவியாதைங்கோ, ஐயா... அவசரம்... இந்தா எடுக்கிறம்..."

கெலி தள்ளிப்போவது மரங்களுக்கிடையால் தெரிகிறது. அவன் மீண்டும் ஏறுகிறான்.

இயந்திரம் இயங்க மறுக்கிறது! இதென்ன சங்கடம்? கெலிக்காரன் திரும்பி வந்தால்?

வண்டியின் கீழ்ப் பதுங்கியிருந்த கண்ணாடிக்காரன் எழுந்துவந்து கைகளைத் தட்டித்துடைத்தவாறே சைக்கிளிடம் போவது தெரிகிறது. அதை வடிவாக எடுத்துவிட்டு, முன்னால் வந்து அவன் கேட்கிறான்;
"தள்ளவேணுமா, தம்பி?"

"ஓமண்ணை, தயவு செய்து.... ஒருக்கா......."

அந்தாள் வந்து வானைத் தொடவும் முன்னாலிருந்த மற்றப் பெடியனும் இறங்கியோடி வருகிறான். அவனது வலது கை மடித்துக்கட்டியிருக்கிறது. கட்டுத்துணி இரத்தத்தில் ஊறிக்கிடக்கிறது. இடது கையால் தள்ளுகிறான். வாகனம் மெல்ல நகர்கிறது.

கெலி திரும்ப வருவதற்குள் இது போகட்டும்....

"வா, தள்ளி விடுவம் ...." - பொன்னையர் மோகனைக் கூப்பிடுகிறார்.

கண்ணாடி ஆளுக்கும், ஒற்றைக் கையால் தள்ளும் பெடியனுக்கும் நடுவில் நின்று தள்ளும் போது பின் கண்ணாடிக்கூடாக வாகனத்துக்குள் என்ன இருக்கின்றதென்று தெரிகிறது!

இன்னும் மூன்று பேர்! காயக்காரர், கடுங்காயம். இரண்டு பேருக்கு அறிவில்லைப் போல பாவம் வலும் இளம்பெடியள்....

அதில் ஒருவன், அந்த சீற்றில் கிடப்பவன்....?

- "இல்லை, அது ஜெகனில்லை. அவன், சுவிஸில், இது யாரோ, அவனைப் போல, அதே மாதிரி அதே வயது..."

காலடியில் மண் புழுதியும் மஞ்சள் வாகைப் பூக்களும் மிதிபடுகின்றன....

இயந்திரம் இயங்கத் தொடங்கிவிடுகிறது. பெடியன் ஓடிப் போய் ஏறிக்கொள்ள, செலுத்துபவன் பின்னால் திரும்பி,....

"நன்றி அண்ணை... வாறம்... ஐயா...." என்று கைகாட்டுகிறான். கண்ணாடி ஆளும் கைகாட்டுகிறான். வாகனம் நகர்ந்து விரைகிறது.

பொன்னையர், மோகன் பின்தொடரக் கடைக்குள் ஏறினார்.

"அண்ணை அந்தப் பெடியளிலை ஒருத்தனைப் பாத்தியளே, சரியா உங்கட சின்னவன் மாதிரி..."

முக்காலியை இழுத்துக் குந்தப் போனபோது கெலி மீண்டும் நெருங்குவது கேட்கிறது.

"அண்ணை, வாறான்... கண்டிட்டாங்களோ?..."

தெருவில் இப்போது கண்ணாடிக்காரனும் இல்லை.

"இனி இந்தப் பெடியள் எங்கை போய் நிப்பாட்டுவாங்கள்? உங்காலை மரங்களுமில்லை மறைவுமில்லை..." பொன்னையர் கேட்கிறார்.

"நீவேசிலை திரும்பி வரேலாதோ?"

கெலி கிட்டுகிறது.

அடுத்த சந்தியில் காது செவிடுபட வெடியோசை அதிர்கிறது. தொடர்ந்து சூடுகள். கடவுளே....

"கிரனேட் அடிக்கிறான், அண்ணை...."

"கண்டிட்டானோ? போன பக்கந்தானே கேட்குது?"

தன் கரும்பு முடிந்த பாங்கில் கெலி...

"ஒருக்கா இருந்து கொள்... என்னெண்டு பாத்திட்டு இந்தா வந்திட்டன்" என்றார் பொன்னையர், மோகனின் சைக்கிளைத் தெருவில் இறக்கியபடி. ■



## விடுதலைப்புலிகளின் சுவிஸ்கிளையின் மே தினம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளையினரின் மே தின ஊர்வலம் [illegible] பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். இவ் ஊர்வலத்தில் [illegible] அதிகமான சுவிஸ் தொழிற்சங்கங்களும், அரசியற் கட்சியின் பிரதிநிதிகளும், பல்வேறு விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

ஊர்வலத்தின்போது, விடுதலைப் புலிகளின் மே தினச் செய்தி ஜேர்மன் மொழியில் மக்களுக்கு வழங்கப்பட்டது. சுவிஸின் 'மே 1ம் திகதி கமிட்டி'யில் அங்கத்தவராக உள்ள விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளையினர் கடந்த 7 வருடங்களாக இவ் மேதின ஊர்வலத்தை ஒழுங்கு செய்து நடாத்தி வருகின்றனர். ■




மணலாற்றில் போராளிகளுக்கு அவன் நல்லவன், கெட்டிக்காரன், அடிபாடுகளில் மிகவும் திறமையாகச் செயற்படுவான். மெலிதான உடலாக அவனைப் பார்ப்பதற்குத் தெரிந்தாலும் சண்டைகளில் கட் பொசிசனில் எல்.-எம். ஜி. யைப் பிடித்த வண்ணம் சுட்டுக்கொண்டு முன்னேறி இராணுவத்தை வீழ்த்துவான். அவன்தான் எல்.-எம். ஜி. அக்பர்.

விடியலுக்கு முந்தியசாவுகள் விடுதலைப்புலிகள் வரலாற்றில் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. ஆம் இந்நிகழ்வுகளில்தான் மணலாற்றில் இன்று ஏ. கே. எல்.-எம். ஜி அக்பரும் இணைந்துவிட்டான். எங்கோ அவன் எம்மைவிட்டு தொலைதூரம் சென்றுவிட்டதாக ஓர் உணர்வு. போராட்டக்களங்களில் போராளிகளின் இழப்பால் துயருண்டு கனத்த இதயத்தில் இன்று இவனின் பிரிவு தனியிடத்தில். ஆனாலும், அம்மண்ணிலும் போராளிகளின் மனத்திலும் மணலாறு மாவட்ட மரங்களுக்கு அவனின் குறும்புத்தனங்களும், சந்தோச விளையாட்டுக்களும், களத்தில் சலனமின்றிச் செயற்படும் துடிப்பும் வீரத்தின் விளைவுகளும் நீங்காத நினைவுகளாய் பதிந்துவிட்டன. ஒரு போராளியின் இழப்பு ஒவ்வொரு போராளியின் மனத்திலும் தான் ஏதோ பறிகொடுக்கக்கூடாத ஒன்றை இழந்துவிட்டதாக அவர்களின் மாறாத தவிப்பின் வெளிப்பில் தெரியும். அது போலவே இன்று அக்பரின் இழப்பும்.

மட்டக்களப்பில் முறக்கொட்டாஞ்சேனைக் கிராமம்தான் அக்பரின் பிறப்பிடம். சதீஸ்குமார் என்பது அவன் இயற்பெயர். சிங்களப்படைகள் மட்டக்களப்பு மண்ணில் செய்துவரும் கொடுமைகளுக்கு போராட்டமே சிறந்தது என முடிவு செய்தான். அதனால்தான், எம்மக்களின் பாதுகாப்பை எம்மால் உறுதிசெய்யமுடியும் என்றுணர்ந்தான். 1988 இன் ஆரம்பத்தில் இயக்கத்தில் இணைந்தான். அதே ஆண்டில் மூதூரில் விடுதலைப்புலிகளின் பத்தாவது முகாமில் பயிற்சிகளை முடித்து களத்தில் இறங்கினான்.

அக்காலப்பகுதியில், இந்தியப் படையுடன் விடுதலைப்புலிகள் போரிட்டுக் கொண்டிருந்தனர். அக்பரும் இந்தியப்படைகளுக்கு எதிரான சில தாக்குதல்களில் பங்கெடுத்துக் கொண்டான். பின் இந்தியப் படை ஈழமண்ணைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கையில், தேச விரோதிகளை அழிப்பதில் அக்பரும் ஈடுபட்டான். இதன் பின்புதான் 1989ம் ஆண்டில் புலிகளின் அணி ஒன்று மணலாறு மாவட்டத்திற்கு வந்தது. அதனுடன் தான் அக்பரும் மணலாற்றுமண்ணில் தனது கால்களைப் பதித்தான். இத்துடன் இவனது செயற்பாடு மணலாற்றில் தொடர்ந்தது. அக்பர் ஏ. கே. எல். எம். ஜியுடன்தான் அதிக விருப்பம் கொண்டவன்.

அவ்வாயுதத்தை துடைத்துத் துணியினால் எப்போதும் மூடியவண்ணமே வைத்திருப்பான். அந்த எல். எம். ஜி சண்டைகளில் தனது சந்தர்ப்பத்தை நிறைவேற்றத் தயங்குவதில்லை. அக்பர் மணலாறு மாவட்டத்திற்கு வந்த சில மாதங்களில் இந்தியப்படைகள் முற்றாக ஈழமண்ணை விட்டு வெளியேறின.

11-06-1990 இல் மீண்டும் இலங்கைப்படைகளுடன் இரண்டாம் ஈழப்போர் தொடங்கியது. அக்பரின் எல். எம்.-ஜிக்கும் வேலைகள் அதிகமாயின. இந்தியப்படைகளுக்கு மணலாற்றில் புலிகள் மறக்கமுடியாத பாடம் புகட்டியதுடன் அங்குள்ள மரம் செடிகொடிகளும் கூட தங்களின் மண் மீதான ஆக்கிரமிப்பை உடைக்க பெரும் எதிர்ப்பை காட்டியன. தொட்ட இடமெல்லாம், கால் வைத்த இடமெல்லாம் வெடிகுண்டுகள். இந்தியப்படைகளின் கால்களும், உடல்களும் சிதற அதிர்ந்தன. உலகில் நான்காவது பெரிய படை "பிச்சை வேண்டாம் நாயைப்பிடி" என்ற அளவில் ஓடியது. இதனால் நிலைகுலைந்த இராணுவத்தினர் 'மணலாற்றில் புலிகள் இல்லை, பேய்கள்தான் வாழ்கின்றன' என்று சொல்லும் அளவிற்கு மணலாற்று மண் தன் வரலாற்றை எழுதியது.

அன்று, ஒரே ஒரு பண்டாரவன்னியன் பிரிட்டிஷ் படை கலங்க மணலாற்று காடுகளில் உலாவந்தான். இன்று, ஆயிரமாயிரம் பண்டாரவன்னியர்கள் இந்தியப் படைகளுக்கு சிம்மசொப்பனமாக அக்காட்டில் எழுந்தனர். இவர்களின் பின்பு இன்று இலங்கைப் படைகளுக்கு பாடம் புகட்ட மணலாறு தன்னை தயார்படுத்தியது. இம்மண் வெறும் நிலமல்ல - தமிழீழத்தின் இருதயம் ஆகும். இதை நசுக்க முற்பட்ட சிங்கள இராணுவத்தினர் அடிக்கடி புலிகளின் துப்பாக்கிகளுக்கு இரையாக தொடங்கினர். அதில் அக்பரின் ஏ. கே. எல். எம். ஜியும் பங்கெடுத்தது. இவனது இயந்திரத் துப்பாக்கி காணாத மணலாற்று எல்லைப் புற முகாம்களே இல்லையென்று கூறுவதற்கேற்ப இவன் எல்லாத் தாக்குதல்களிலும் பங்கெடுத்தான். தினமும் சிங்கள இராணுவத்தினர் புலிகளின் கடுமையான தாக்குதல்களை எதிர்கொள்ளவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர். இலங்கை அரசும், இவர்களை புலிகளின் மரணவலைக்குள் தள்ளிக் கொண்டே இருந்தது. இதைப்புரியாது பணத்திற்காக சண்டையிடும் இராணுவத்தினர் புலிகளின் விடுதலை உணர்விற்கும், உறுதிக்கும் முன்னே சிறு தூசிகளாகவே இருந்தனர்.

மணலாறு, ஒரு வளமான மண். இதை அபகரிக்க இலங்கை அரச தனது படைகளின் உதவிகளுடன், தன் இன வெறிப்பாதங்களை அம்மண்ணில் படிப்படியாக பதித்து குடியேற்றங்களை நிறுவியது. இதை நிறுத்த புலிகள் திடசங்கற்பம் கொண்டனர். சிங்கள வெறியர்களை அடித்துத் துரத்தினர். அன்று இப்படிச் சிங்கள குடியேற்ற வாசிகளை கதிகலங்க வைத்தவர்களில் நவம், லோறன்ஸ், சபா ஆகியோருடன் இன்னும் பல நூறு புலிகள் அம்மண்ணின் சுபீட்சத்திற்காய் போராடி தமிழீழ உணர்வுகளைத் தாங்கிய வண்ணம் தமிழீழ மண்ணின் விடிவுக்காய் சாவை அணைக்கின்றனர்.


கப்டன் அன்பரசன்/ அக்பர்

அக்பர் இம்மாவட்டத்தை சாராதவன் என்றாலும், எங்கென்றாலும், எம் ஈழமண்ணில் எவர் என்றாலும் தமிழ் மக்கள் ஆதலால் இம்மண்ணின் காவலாளியாகத்தான் அக்பரும் போராடினான். அக்பர் மணலாற்றில் கரையோர முகாம்களில் தங்கவே அதிகமாக விரும்புவான். அப்படியான முகாம்களுக்கு அவனையும் அவனது குழுக்களையும் போகும்படி தளபதி பணிப்பாராயின் மிகவும் சந்தோசத்துடன் தான், அங்கு போய்ச் சேருவான். அவன் புறப்படும் இடத்திலிருந்தே அங்குபோய்ச் செய்ய வேண்டிய வேலைகளை மற்றைய போராளிகளுக்கு கூறுவான். அவ்வளவு கூடுதலான பிரியத்தை அம்முகாம்களில் வைத்திருப்பான். அதற்கு காரணம் உண்டு.

கரையோர முகாம்களில் தென்னந் தோட்டங்கள் உள்ளன. இதனால், இளநீருக்கு பஞ்சம் இல்லை. கடலுக்குள் குளிப்புக்கும் விளையாட்டுக்கும் குறைவில்லை. இரவோடு இரவாக கடல் ஓரங்களில் உள்ள பாறைகளின் வெடிப்புகளுக்குள் இருக்கும் நண்டுகளை டோர்ச்லைட் வெளிச்சத்தில் ஊசிக்கம்பியால் குத்தி அவற்றைச் சேர்த்து வந்து, சமையல் செய்து, ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் போராளிகளையும் எழுப்பி அவர்களுடன் சேர்ந்திருந்து உண்ணுவான். அதன் பின்பே அக்பர் நித்திரைக்குப் போவான். இதனால்தான், அம்முகாம்களில் அவன் தங்குவதற்கு விரும்புவதுண்டு. உப்புவெளிகளில் மாலையான நேரத்தில் கிளித்தட்டு விளையாடுவதற்கு ஆட்களைச் சேர்த்தெடுப்பான். விளையாட்டு என்றால் முதலில் வருவது அவன்தான். எப்பொழுதும் எல்லோரிடமும் கலகலப்பாகவும் சிரிப்பூட்டும் கதைகளுடனுமே சேர்ந்திருப்பான். போராளிகள் இவனது பகிடிக்கதைகளைக் கேட்பதற்காகவே இவனுடன் கூடிவிடுவார்கள். இவன் கதைக்கும் போது எழும் சத்தம் உரலில் உலக்கை போடும் போது எழும் ஓசையாகவே இருக்கும். இதை எங்களுடைய தளபதி அடிக்கடி கூறி அவனையும் எல்லோரையும் சிரிக்கவைப்பார். அவரின் அன்புடனும் அதேநேரம் கண்டிப்புடனுமே வளர்ந்த போராளிகளில் அக்பரும் ஒருவன். குறும்புத்தனங்களும் விளையாட்டுக்களும் எவ்வாறு உள்ளதோ அதேபோல் தான் வீரத்தில் சிறந்து விளங்கினான். இவன் மணலாற்றில் இலங்கை இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட மின்னல் தாக்குதல் நடவடிக்கையில் இருந்து, இன்னும் பல முகாம் தாக்குதல்களின் போதும் பலமுறைகள் காயப்பட்டவன். அதற்காக யாழ்ப்பாணம் சென்று காயங்கள் மாறியதும் மணலாற்றுக்கு வந்து சண்டையிடும் குழுவில் இணைந்து கொள்வான். இது தான் அக்பரின் குண இயல்புகள்.

1992இல் ஆரம்பத்தில் இவனுடைய பெற்றோர்கள் மட்டக்களப்பில் இருந்து எத்தனையோ கஷ்டங்களுக்கும் இராணுவத்தின் சோதனைகளுக்கும் மத்தியில் வந்து இவனைப் பார்த்து விட்டு சென்றனர். ஆனால், மறுபடியும் மணலாற்றுக்கு அவர்கள் வந்தால் அவனை உயிருடன் பார்க்க முடியாது அவனுடைய கல்லறையைத் தான் பார்க்க முடியும்.

ஆம், இன்று எங்களின் அக்பர் எங்களுடன் இல்லை. "மறுகா போவோம்" "மறுகாலடா" என்று மட்டக்களப்பு பாசையில் பகிடியாக கதைப்பதற்கு அக்பர் இன்றில்லை. அவன் எம்மை விட்டு பிரிந்து விண்ணில் வாழும் மாவீரர்களுடன் சேர்ந்துவிட்டான். ஆனால், அவனில்லாமல் எங்கள் முகாம்கள் அனைத்தும் வேதனையைத் தருகின்றன. எத்தனையோ தடவைகள் காயப்பட்டுத் தப்பியவன்.

24-08-1992 அன்று அலம்பில் முகாம் தகர்க்க சிரித்த முகத்துடன் சந்தோசமாகப் போனவன், மீண்டு வரும் போது அவனையும் அவனது எல். எம். ஜி. யையும் அவன் தோழர்கள் தூக்கிய வண்ணம் முகாமிற்கு வந்தனர். அக்பர் வீரச்சாவடைந்து விட்டானாம். இந்த சண்டையில் நீ சாவாய் என்று அக்பரை பார்த்து ஒவ்வொரு சண்டையிலும் தளபதி பகிடியுடன் சொல்வார். ஆனால், மீண்டும் அவன் வருவான். ஆனால் இன்று உண்மையாகவே சாய்ந்து விட்டான். இவனது இழப்பும் எல்லாப் போராளிகள் மனதிலும் வேதனையை ஏற்படுத்தியது. விடியலுக்காய் காத்திருந்தவன் புலரும் முன்பே சருகாகி விட்டான்.

இன்று, அவன் பிடுங்கித் தந்த இளநீர், சமைத்துத் தந்த நண்டுக்கறி, உப்புவெளிகளில் விளையாடிய விளையாட்டுக்கள், கடலில் நேரம் போவது தெரியாமல் நீந்தி விளையாடியது எல்லாம் மறக்க முடியாத நினைவுகளாகி விட்டன. இன்று மணலாறு மக்கள் தமது நிலத்தைப் பாதுகாக்க ஆயுதங்களை எடுத்துள்ளனர். புலிகளும் மக்களும் இன்று ஒன்றாகி காவல் காக்கின்றனர். இவர்கள் அக்பரின் கனவுகளுடன் அம்மண்ணின் விடிவுக்காய் களமாடி சாவை அணைத்த நூற்றுக்கணக்கான மாவீரர்களின் கனவுகளையும் சுமந்து கொண்டு விடியலின் பாதையில் விரைகின்றனர்.

கப்டன் அக்பரின் ஏ. கே. எல். எம். ஜி. இதோ ஒரு போராளியின் கரத்தில் தவழ்கின்றது. ஆனால் அவனது நினைவுகள் மணலாற்று மண்ணிலும் மக்களிலும் மரம் செடிகொடிகளிலும் மறையாத தென்றலாய் தவழ்ந்து கொண்டிருக்கப் போகின்றது. மணலாற்று மண் தன் வரலாற்றில் அக்பரையும் அணைத்துக் கொண்டது ■

— சித்தா

## மட்டு. கிராமங்கள் படையால் சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு மாவடிவேம்பு என்ற கிராமத்தை அதிகாலை 4 மணியளவில் சுற்றிவளைத்த கொம்மாந்துறை இராணுவத்தினர் அங்கிருந்த ஆண், பெண் இருபாலாரையும் கைது செய்து அங்கிருந்த கோவில் ஒன்றிற்கு கொண்டு சென்றனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் தலையாட்டி முன் நிறுத்தப்பட்டு அதில் 5 பொதுமக்கள் இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதேசமயம் மறுநாள் இரவு 10 மணியளவில் சித்தாண்டி படையினர் துரோகக்குழுவுடன் இணைந்து அப்பகுதி வீடுகளினுள் நுழைந்து நான்கு பொதுமக்களைக் கைது செய்து கொண்டு சென்றனர். சித்தாண்டியைச் சேர்ந்தவர்களான ராஜா (24 வயது), ரவி (வயது 26), [illegible] (வயது 30), செல்வம் (வயது 25) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இப்போது இவர்களைத் தாம் கைது செய்யவில்லை என்று படையினர் கூறுகின்றனராம். மாவடிவேம்பைச் சேர்ந்த திருமணமான ச. செல்வராஜா (22 வயது) என்பவரையும் [illegible] ரவி என்பவரையும் இதுபோல் கைது செய்து முகாம் கொண்டு சென்றனர்.

# ஸ்ரீலங்கா அரசின் பொ
# யாழ் மாவட்ட

சிறீலங்காவின் பௌத்த சிங்கள பேரினவாத அரசின் பொருளாதாரத் தடைக்கும், இராணுவ முற்றுகைக்கும் இலக்காகியுள்ள யாழ்ப்பாண மாவட்டம் 13 உதவி அரசாங்க பிரிவுகளான நெடுந்தீவு, தென்தீவகம், வடதீவகம், யாழ்ப்பாணம், நல்லூர், வலிகாமம் தென்-மேற்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு, தென்மராட்சி, வடமராட்சி தென்-மேற்கு, வடமராட்சி வட-கிழக்கு ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. 1036.8 சதுர கி.மீ. நிலப்பரப்பைக் கொண்ட இப்பிரதேசம், 951 சதுர.கி.மீ. நிலப்பரப்பையும், மிகுதி கடலேரிப் பகுதியையும் கொண்டது. இது சிறீலங்கா என்று இன்று அழைக்கப்படும் இலங்கைத் தீவின் 1.58 வீத பரப்பாகும். 1981 ம் ஆண்டே இலங்கைத் தீவில் இறுதியாக, முழுமையான குடிசன மதிப்பு நடாத்தப்பட்டது. அதன்படி 7,38,791 பேர் இப்பிரதேசத்தில் வாழ்ந்து வந்தனர். இதில் 3,63,495 பேர் ஆண்கள். 3,75,296 பேர் பெண்கள். யாழ்ப்பாண மாநகர சபைக்குள் 1,18,224 பேர் வாழ மிகுதியானோர் மற்றைய நகரங்களிலும் கிராமங்களிலும் வாழ்ந்து வந்தனர்.

இம்மக்களில் 35% மக்கள் விவசாய - மீன்பிடி பொருளாதாரத்தை உருவாக்கினர். 28% மக்கள் உற்பத்திசார் கைத்தொழில் துறையிலும், 12.1% மக்கள் விற்பனைத் துறையிலும், 9.6% மக்கள் உயர் பதவிகளிலும் தொழில் நுட்பத் துறைகளிலும் (டாக்டர், பொறியியலாளர், பேராசிரியர் போன்றவை), 7.2% மக்கள் எழுதுவினைஞர் சேவையிலும், 4.9% மக்கள் சேவைகள் துறையிலும், 0.7% மக்கள் நிர்வாக -முகாமைத் துறையிலும், 2.5% மக்கள் பல்வகைத்துறைகளிலும் தொழில் செய்து வந்தனர். எல்லாமாக 1,59,063 மக்கள் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு இப்பிரதேசத்திற்கு வளமான பொருளாதாரத்தை உருவாக்கி வந்தனர்.

இன்று சிறீலங்கா அரசின் மனிதாபிமானமற்ற யுத்தக் குற்றச் செயல்களான பொருளாதாரத்தடை, போக்குவரத்துத் தடைகளூடாக மக்களை முற்றுகையிடுதல், இராணுவ ரீதியான முற்றுகை ஆகியவற்றால் இந்த மக்கட் தொகுதி பொருளாதார ரீதியாக சாகடிக்கப்பட்டு வருகின்றது.

27 வைத்தியசாலைகளையும், 23 சுகாதார நிலையங்களையும் கொண்டியங்கிவந்த யாழ் குடாநாட்டின் வைத்திய சேவையில் 2425 படுக்கைகளும், 139 வைத்தியர்கள், 04 வைத்திய நிர்வாக அதிகாரிகள், 20 பல் வைத்தியர்கள், 71 உதவி வைத்திய பயிற்சியாளர்கள், 315 தாதிகள், 7 வைத்திய எம்.ஓ.எச். நிலை அதிகாரிகள், 50 சுகாதார பரிசோதகர்கள், 106 உதவி சுகாதார அலுவலர்கள் ஆகியோரும் சேவையாற்றி வந்தனர். இதைவிட தனியார் மருத்துவமனைகள், மருத்துவர்கள் தனியாகவும் சேவையாற்றி வந்தனர். இலங்கைத் தீவில் திறமையான வைத்திய சேவையை, யாழ் குடாநாடு கொண்டிருந்தமையால் இங்கு உடல் ஊனமுற்றோர் எண்ணிக்கை மிகவும் குறைவாகக் காணப்பட்டது. பார்வையற்றோர் 495 பேர் (இதில் 196 பெண்கள்) செவிப்புலன் இழந்தோர் 370 (இதில் 156 பேர் பெண்கள்) பேசும் சக்தி இழந்தோர் 704 (இதில் 309 பெண்கள்), செவிப் புலனும் பேசும் சக்தியுமற்றோர் 420 (இதில் 187 பெண்கள்) என 1981 குடிசன மதிப்பு கூறுகிறது.

ஆனால் இன்று சிறீலங்கா அரசின் மிகக் கொடுஞ் செயலான மருந்துகள் தடை, தடுப்பூசிகள் தடை, மகப்பேற்றுச் சாதனங்கள் தடை என்பவற்றால் ஒரே ஒரு வைத்தியசாலை மட்டும், அதுவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் மிக மிகக் குறைந்த சேவையை அளித்துவருகிறது. இதனாலும், சிறீலங்கா அரசின் கண்மூடித்தனமான குண்டு வீச்சுத் தாக்குதல்களினாலும், எறிகணைத் தாக்குதல்களாலும் பல ஆயிரக்கணக்கானோர் நிரந்தர நோயாளிகள் ஆகியிருப்பதுடன், என்றுமில்லாதவாறு உடல் ஊனமுற்றோர் தொகையும் பெருகி வருகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக சத்துணவு இன்மையால் 3000 குழந்தைகள் இவ்வருடத்துள் மரணத்தை எதிர்நோக்கி நிற்கின்றனர்.


மயிலிட்டி சுகநோய் வைத்தியசாலை, பண்ணை மார்பு நோய் வைத்தியசாலை, தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை என்பன இராணுவ வெறியாட்டத்தால் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டன. மின்சாரத்தடையால் சத்திர சிகிச்சைகள் நடைபெறமுடியாதுள்ளது.

561 அரசாங்கப் பாடசாலைகளையும், 05 தனியார் பாடசாலைகளையும் கொண்டிருந்த யாழ்ப்பாண மாவட்டக் கல்விச் சேவை 6787 ஆசிரியர்களையும், 206810 மாணவர்களையும் 1981 குடிசன மதிப்பீட்டின்படி கொண்டிருந்தது. 76 பாடசாலைகளில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தர வகுப்புக்கள் இயங்கின. யாழ்ப்பாண பல்கலைக் கழகம், வடலங்கா மருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ் பல்தொழில்நுட்பக் கல்லூரி, பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி, யாழ் தாதிகள் பயிற்சிப் பாடசாலை ஆகிய உயர் கல்வி நிறுவனங்கள் மேற்படிப்புகளுக்கு உதவின. இன்று சிறீலங்கா அரசின் 'தமிழர்க்கு கல்வித் தடை' என்ற உள்நோக்கை கொண்ட போக்கினாலும், இராணுவ இனஅழிப்பு நடவடிக்கைகளாலும் யாழ்ப்பாண மாவட்டம் கல்வி வசதியற்ற ஒன்றாக மாற்றப்பட்டு வருகிறது.

1,61,338 வீடுகளைக் கொண்டிருந்த யாழ்ப்பாண மாவட்டத்தில் குண்டு வீச்சு, எறிகணைத் தாக்குதல், இராணுவ நடவடிக்கைகளால் பல்லாயிரக்கணக்கான வீடுகள் அழிந்துள்ளன.

யாழ்ப்பாண மாவட்டம் 1984ல் 17,678,000 கிலோ எடையுள்ள மீன்களைச் சந்தைப்படுத்தியது. இது இலங்கைத் தீவின் மீன்பிடி உற்பத்தியில் 10[illegible] ஆகும். 152 மைல் கடற்கரை கோட்டு நீளத்தையும் (Length of the coast line) 3360 கண்ட உற்பத்திப் பரப்பையும் (Continental shelf area) கொண்டது. இது 110 தொன் உற்பத்தியை 5 மைல் கடற்கரைப் பிரதேசத்தில் அளிக்கக் கூடிய தன்மையையும் (Estimated catch potential within 5 miles coast) யாழ்ப்பாண மாவட்ட மீன் பிடித்துறை கொண்டிருந்தது. 23 ரோலர்கள், 28' தொடக்கம் 32' நீளப் படகுகள் 532, 17.5'-24' நீளப்படகுகள் 520 ஐயும், அத்துடன் 1272 இயந்திரப் படகுகளையும், 2940 சாதாரண படகுகளையும் சேர்த்து மொத்தம் 5287 படகுகள் தொழிலில் ஈடுபட்டிருந்தன. 12,028 மீனவர்கள் மீன் பிடித்தலில் ஈடுபட்டிருந்தனர். 28'-32' படகுத் தயாரிப்பு நிலையங்கள் 77-உம், 17.5'-24' படகுத் தயாரிப்பு நிலையங்கள் 230உம் காணப்பட்டன. மயிலிட்டி, பருத்தித்துறை ஆகியவை மீன்பிடித்துறைமுகங்களாகும். பாசையூர், குருநகர் என்பன நங்கூர துறைமுகங்களாகத் திகழ்ந்தன. இவற்றைவிட 19 வெவ்வேறு மீன் பிடி இறங்குதுறைகள் தொழிலில் உதவின. இவ்வாறு முன்னேற்றத்துடன் காணப்பட்ட மீன் பிடித் தொழில் இன்று முற்று முழுதாக சிங்கள இராணுவத்தால் முடமாக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டம், படகுத் தொழிற்சாலைகள், அச்சுவேலி கைத் தொழிற்பேட்டை, நூல் நூற்கும் தொழில் நிலையங்கள், ஆடைத் தயாரிப்பு தொழிற்சாலைகள், ஐஸ் தொழிற்சாலைகள், மீன் பிடி உற்பத்தி தொழிற்சாலை, தும்புத் தொழிற்சாலை, கண்ணாடித் தொழிற்சாலை, சவர்க்காரத் தொழிற்சாலை, நீரிறைக்கும் இயந்திர உற்பத்தித் தொழிற்சாலை, கம்பி வலைகள் தயாரிப்பு தொழிற்சாலை, அலுமினிய உற்பத்தித் தொழிற்சாலை, சீமெந்துத் தொழிற்சாலை, மிருக உணவு உற்பத்தித் தொழிற்சாலை, திராட்சை ரச உற்பத்தித் தொழிற்சாலை, குளிர்பான உற்பத்தித் தொழிற்சாலைகள் போன்ற பல தொழிற்சாலைகளைக் கொண்டிருந்தது. இன்று மின்சாரமின்மையால் இத் தொழிற்சாலைகள் செயலிழந்துள்ளன.




நீ சிந்தும் சோறு கண்டு மகிழ்ந்த கதிர் மண்ணில்



## ...ருளாதாரத் தடையும்
## ...வளச் சீரழிவும்

**எம் மக்களை சத்திழக்க வைத்து சாகடிப்பதற்கு மறுபெயரே கடலேரித்தடை**






**நீ சிதறும் சோற்றுக்கு ஏங்க வைத்தனரோ கொடியவர்கள்**

புகையிலையை அடிப்படையாகக் கொண்ட கைத் தொழில்கள் யாழ்ப்பாணத்திற்கே தனியான இலச்சினையாகத் திகழ்ந்தன. ஆனால் இன்று மின்சாரமின்மை, போக்குவரத்து வசதியின்மை, இராணுவ ஆக்கிரமிப்பு, கிருமிநாசினியின்மை என்பன புகையிலை குடிசைக் கைத்தொழிலையும் கடுமையாகப் பாதித்துள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தின் கைத்தொழில் துறையை எட்டுத் தலைப்புக்களில் பிரிக்கலாம்.

1. உணவு - குளிர்பான உற்பத்தியும், புகையிலையும்
2. ஆடைத்தொழிலும் தோல் உற்பத்தியும்
3. காகிதத் தொழில், அச்சிடுதல், வெளியிடுதல்
4. இரசாயன உற்பத்தி, பெற்றோலிய நிலக்கரி, இரப்பர் -பிளாஸ்ரிக் உற்பத்தி
5. உலோக மற்றும் கனிப்பொருள் உற்பத்தி
6. உலோக உற்பத்திகளும் இயந்திர உதிரிப்பாக உற்பத்திகளும்
7. 36 கைத்தொழில் அலகுகளைக் கொண்ட அச்சுவேலிக் கைத்தொழிற் பேட்டை
8. மற்றைய உற்பத்திக்கான கைத்தொழில்கள்

இன்று இத்துறைகள் எல்லாமே செயலிழக்க வைக்கப்பட்டுள்ளன. மூலப்பொருட்கள் உள்வரவு, மின்சாரம் என்பன சிறீலங்காவால் தடைசெய்யப்பட்டு வருகிறது. யாழ் குடாநாட்டில் கோழி, ஆடு மாடு வளர்ப்பு மூலம் மக்களின் உணவுத் தேவைக்கான முட்டை, பால் என்பன போதியளவு கிடைத்து வந்தன. 130,000 மாடுகளும், 96,3[illegible] ஆடுகளும், 15,032 செம்மறியாடுகளும், [illegible]81,731 கோழிகளும் 1984ல் காணப்பட்டன. கோழிகள் வளர்ப்பிற்கு 27,100 மெற்றிக் தொன் கோழித்தீன் தேவையாக இருந்தது. ஆனால், மக்கள் இடம்பெயர்ந்தமைகளாலும் போக்குவரத்துத் தடைகளாலும் ஆடு, மாடு கோழிகள் இராணுவத்தால் வேட்டையாடப்பட்டு வந்தமையினாலும் இன்று கால்நடை வளர்ப்பு புனர்வாழ்வை நாடி நிற்கின்றது.

யாழ்ப்பாண மாவட்டம் 26,200 கெக்டர் நிலத்தை விவசாயத்தின் கீழ் கொண்டிருந்தது. 11,970 கெக்டர் நிலத்தில் நெல்லும், 6,500 கெக்டர் நிலத்தில் தோட்டச் செய்கையும், 2219 கெக்டர் நிலத்தில் பழச்சாகுபடியும், 1770 கெக்டர் நிலத்தில் தானிய உற்பத்தியும், 1600 கெக்டர் நிலத்தில் பயன் தரும் மரங்களும் காணப்பட்டன. இலங்கைத்தீவில் அதிகளவில் 2700 கெக்டர் நிலத்தில் வெங்காயமும், 2500 கெக்டர் நிலத்தில் மிளகாயும் பயிராகின. 27 குளங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தின் விவசாயத்திற்கு உதவி வந்தன. 66,71,236 பனைமரங்களும் கற்பகதருக்களாக யாழ் மாவட்டத்தில் 1984 ல் நின்றன. ஆனால் இன்று குண்டு வீச்சுக்களாலும் பொருளாதாரத்தடைகளாலும், மின்சாரமின்மையாலும் விவசாயம் பாதிப்புக்குள்ளாகி வருகின்றது.

சிறீலங்கா அரசின் குடா நாடு மீதான பொருளாதார அழுத்தங்களை தளர்த்தும் பணியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், தமிழர் புனர் வாழ்வுக் கழகம் ஆகியன அரும்பணியாற்றி வருகின்றன. தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுகள், மாற்றீடுகள், மாற்றுவழிகள் என்பனவற்றை வெற்றிகரமாக மேற்கொண்டுவருகிறது. தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இடம்பெயர்ந்த மக்களுக்கு புனர்வாழ்வு, தொழில் முயற்சிகளை தொடர-தொடங்க உதவுதல் போன்ற செயற்பாடுகளைச் செய்து மக்கள் பட்டினிநிலையை அடையவிடாது காத்துவருகின்றனர்.

புனர்வாழ்வுக் கழகமானது பின்வரும் உப தலைப்புக்களின் கீழ் தனது பணியை செய்கின்றது.

1. குடும்பங்களைக் குடியமர்த்தல்
2. திடீர் இடம்பெயர்வுகளில் உறைவிடம் அளித்தல்
3. கடற்றொழில் ஊக்குவிப்பு நிலையம்
4. விவசாய ஊக்குவிப்பு நிலையம்
5. உழைக்கும் நபரை இழந்த குடும்பத்திற்கு உதவுதல்
6. ஊனமுற்றோருக்கு உதவுதல்
7. ஆதரவற்ற சிறுவர்களைப் பராமரித்தல்
8. பாலர் பாடசாலை நடாத்துதல்
9. பாடசாலை மாணவர்களுக்கு உதவுதல்
10. சுயதொழில் முயற்சிகட்கு உதவி
11. தும்புத்தொழிலை ஊக்குவித்தல்
12. தையல் நிலையங்களை நடாத்துதல்
13. பனை சார்ந்த தொழில்களை ஊக்குவித்தல்
14. பன்பாய் இழைத்தலை ஊக்குவித்தல்
15. பேக்கரி அமைக்க உதவுதல்
16. அகதி முகாம்களைப் பராமரித்தல்
17. குடிசைகள் அமைத்தல் / புனரமைத்தலுக்கு உதவுதல்
18. வறுமைக் கோட்டின் கீழுள்ள பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவுதல் போன்ற செயற் திட்டங்களுக்கூடாக தமிழர் புனர்வாழ்வுக்கு உதவி வருகின்றனர்.

ஆயினும் போக்குவரத்துத் தடை, தபால் தடை போன்றவற்றின் மூலம் சிறீலங்கா அரசு மேலும் மேலும் நெருக்கடிகளை ஏற்படுத்திவருகின்றது. 4606 வர்த்தகப் பயன்பாட்டுக்கான வாகனங்களையும், 5814 தனியார் வாகனங்களையும், 3686 வாடகை வாகனங்களையும் கொண்டிருந்த யாழ்ப்பாண மாவட்டம் பெற்றோலியத்தடை, போக்குவரத்துப் பாதை மூடப்பட்டமை என்பவற்றால் போக்குவரத்துக் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றது. போக்குவரத்துக் கஷ்டங்களால் நோயாளிகள் உரிய நேரத்தில் யாழ் செஞ்சிலுவைச் சங்க வைத்தியசாலைக்கு வரமுடியாமல் தவிக்கின்றனர். 'பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக' கிளாலிக் கடலேரிப் போக்குவரத்துத் தடை மக்கள் உயிர்களைச் சிறீலங்காப் படைகள் குடிப்பதற்கு வழிசமைத்துள்ளது.

எனவே போக்குவரத்துத் தடை, தபால் தடை, பொருளாதாரத்தடை என்பவையெல்லாம் யாழ்ப்பாண மாவட்ட மக்களின் சுதந்திரத்தை நசுக்கி அவர்களின் எதிர்காலத்தை சாகடிப்பதற்கு சிறீலங்கா அரசு எடுக்கும் இன அழிப்பு நடவடிக்கைகளே. ■



# தமிழீழத் திருநாட்டில்

"நான் வந்துவிட்டேன்!"

இவ்விதம் கூறிய புதிய 'புக்காரா' விமானத்தைப் பார்த்து பழைய பொம்மர் சிரித்தது! 'சியா மாசெட்டி' என்ற பெயரில் அது தமிழீழ வானில் உயரப் பறந்து உலாவிய அனுபவசாலி!

என்றாலும், எவ்வளவோ எண்ணி வந்த புதிய புக்காராவுக்கு இந்தச் சிரிப்பு ஒரு சூடு போலப்பட்டது!

"ஏன் சிரிக்கிறாய்?"

"உன்னைப் பார்த்தல்ல, உடன் பிறப்பே! என் முன்னைய எண்ணத்தை எதிர்பார்ப்பை, பட்டறிந்த உணர்வை, மீண்டும் எண்ணிச் சிரித்தேன்" என்றது சியாமாசெட்டி.

புக்காராவுக்கு இப்போது சினக்க இயலவில்லை. ஒரு விரும்பாத ஆவலே மேலே முந்தது! பழைய பொம்மர் தொடர்ந்தது -

அது பெரும் இரைச்சலோடு எழுந்து உயர்ந்தது.

பழைய பொம்மர் தனியாக நின்றது: பல நினைவுகள் - உணர்வுகளின் நடுவே அது ஆழ்ந்து நின்றது. வீரம் வேறு: பொய் புழுகு புரட்டுப் பிரச்சாரம் மூலம் வீரம் போலக் காட்டும் பொய்ம்மை வேறு. இந்தப் பொய்களையே தாங்கியபடி தன்னைப் பார்வையிட வந்த தளபதிகள், பெரும் அரசியற் தலைவர்கள் என்போரின் பழைய நினைவுகள் தலைதூக்க முயன்றன.

எதனையும் கவனியாது வெயில் மேலெழுந்து கொண்டிருந்தது. தூரத்து இரைச்சலொன்று நெருங்கி வருவது கேட்டது. ஆம், பெரும் சத்தமிட்டபடி புக்காரா தரையிறங்கி மெதுவாக ஊர்ந்து, மீண்டும் தன் பழைய இடத்தை எடுத்துக் கொண்டது. வியர்த்துக் கொட்டிற்று!

மீண்டும் புக்காரா - சியாமாசெட்டி தனிமையில் நின்றன.

மக்கள் வாழும் வீடுகளிலும் பிள்ளைகள் படித்துக் கொண்டிருந்த பாடசாலைகளிலும்! பசு ஒன்று உருண்டு துடித்து இறந்தது. மூதாட்டி ஒருத்தி துண்டமாய் மடிந்தாள். தெருவில் நின்ற பொதுமக்களில் சுமார் பத்துபேர் பலியானது தெரிந்தது. இதற்குள் புலிப் போராளிகளின் எதிர்க்கணைகள் எழுந்ததும் எனது ஓட்டி தடுமாறிவிட்டான். மற்றவன் பிழையான இடங்களிலெல்லாம் சரியாகப் பொழிந்தான். அத்துடன் விரைந்து மேலெழுந்து இங்கு வந்துவிட்டேன்!"

"இன்னும் சிறிது நேரத்தில், பன்னிரண்டு பயங்கரவாதிகள் சாவடிக்கப்பட்டனர் என்ற செய்தி வரும், கேள்!" எனச் சிரித்தது சியாமாசெட்டி. அது தொடர்ந்தும் கூறிற்று -

"காடுகளை அழிக்கவும் அங்குள்ள உயிர் இனங்களை மாய்க்கவும்கூட சிறீலங்கா அரசு எம்மைப் பாவிக்கின்றது."




"நாங்கள் விமானப்படை! எட்டாத இடமெல்லாம் எம் தாக்கல்கள் எட்டும்! எங்கள் வீச்சிலே கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகும்! எதிர்த்தோர் சிதறிப்பலியாவர்! தமிழீழ மக்கள் சரணடைவர்! - இவ்விதம்தான் நான் எண்ணினேன்" என முடித்தது சியா மாசெட்டி.

"அப்படியானால்?"

"இன்று என் மனத்திலே சோர்வுதான் உள்ளது. இறகுகள் களைத்துவிட்டன. இந்த அரசின் வெற்றி பிற்போட்டு பிற்போட்டு, பின் வாங்கி நிற்கிறது!" என்றது பொம்மர்.

"அதற்குத்தான் நான் வந்துவிட்டேன்!" எனத் தலை நிமிர்த்திக் குரல் கொடுத்தது புக்காரா. அது எண்ணியபடி மறுநாள் விடிந்தது. பெரும் ஆர்ப்பாட்டத்துடன் வந்த சிலருள் இருவர் அந்தப் புக்காராவில் ஏறிக்கொண்டனர்.

ஆனால், புக்காராவின் முகத்தில், களிப்போ பெருமிதமோ காணப்படவில்லை. வெறுப்புக் கோபாவேசமே ஏற்பட்டது!

"வெறும் பொய் பம்மாத்து!" இவ்விதம் உரத்த குரலில் கதையைத் தானே தொடங்கிற்று.

## உருவகக் கதை

"ஏன்?" இது சியாமாசெட்டியின் கேள்வி. பதில் கூற புக்காரா தயங்கவில்லை -

"இவர்கள் அங்கு - நான் பிறந்த நாட்டில் -வந்து கூறியது வேறு. அதன்படி இங்கு நான் போர் முனைக்குச் செல்வதாக எண்ணினேன். ஆனால், இங்கு செலுத்தப்பட்டது போர்முனைக்கு அல்ல, ஊர்மனைக்கு! குண்டுகள் வீசப்பட்டன. ஆனால், எங்கு தெரியுமா?

"எங்கு?"

"தமிழீழ மண்ணில் - அது வேற்றுநாடு தனிநாடு என்பதால்."

வானத்தில் ஓசை பொழிந்தது. 'தமிழீழம் தனிநாடுதான்' என வானத்தில் ஓசை பொழிந்தது.

எதிர்பாராத மழை ஒன்று கொட்டியது. அதன் நடுவே பழைய பொம்மர் தன் நெஞ்சத்தின் ஆழத்திலிருந்தும் கூறிற்று. "நான் ஒன்றையே விரும்புகிறேன்."

"அது என்ன?"

"இந்தப் பொய்யான - அநீத -அரசின் பொம்மராய் இருப்பதைவிட, ஒரு புலிப்போராளியின் ஊர்தியாய் இருப்பது மேல். அதனையே நான் மெய்யாக விரும்புகின்றேன்."

வானம் சிலிர்த்து நின்றது! ■

- நாக பத்மநாதன்

# தொன்மை மிக்க தமிழர் வரலாறு

■ 1546ல் இலங்கையை ஆட்சி செய்த புவனேகபாகு மன்னன் தன் கையொப்பத்தை தமிழில் எழுதி வந்தான். இவனது அரசியல் மொழியாகவும் அரண்மனை மொழியாகவும் தமிழே இருந்தது. இவை கோகில சந்தேசம், கிரசந்தேசம், செவுல் சந்தேசம், செலலிகினி என்னும் சிங்கள நூல்களில் கூறப்பட்டுள்ளது.

■ கயபாகு வேந்தன் பத்தினித் தெய்வமாகிய கண்ணகிக்கு விழா எடுத்து வந்ததை இன்று 'பெரகரா' என்று அழைக்கின்றார்கள். தலதா மாளிகையில் கண்ணகிக்கே முன்னர் கோயில் இருந்தது. இன்றும் அக்கோயில் அங்கு உண்டு.

■ புத்தர் பெருமானுடைய காலத்திற்கு முன்னர் (சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்) ஈழத்தில் வாழ்ந்த நாகர்களின் தாய்மொழி தமிழாகவே இருந்தது. நாகர் இனத்தைச் சேர்ந்த முரஞ்சியூர் முடிநாகராயர் முதல் சங்க காலத்துப் புலவர் ஆவர்.

■ இலங்கையின் வடபகுதி முன்னர் 'நாகதீபம்' என பெயர் பெற்றிருந்ததாக மகாவம்சம் கூறுகின்றது.

■ இலங்கையின் மூன்றில் ஒரு பகுதி தமிழர் தாயகம் ஆகும். இங்கு வாழையடி வாழையாக தமிழர் வாழ்ந்து 13ஆம் நூற்றாண்டில் தமிழ் அரசினை நிலைநாட்டினார்கள்.

■ யாழ்ப்பாணத்தில் தமிழரசு தோன்றுவதற்கு முன்னரும் தமிழர்கள் இலங்கையை கி.மு. நூற்றாண்டு முதல் இடையிடையே ஆண்டனர். கி.மு. 2 ஆம் நூற்றாண்டில் இலங்கை முழுவதையும் ஆண்டவன் எல்லாளன் என்னும் தமிழ் மன்னன்.

■ 10 ஆம் நூற்றாண்டின் இறுதியில் முதலாம் இராச இராசன் என்னும் சோழ மன்னன் இலங்கையை வென்று பொலநறுவையைத் தலைநகராக்கினான்.

■ 11 ஆம் நூற்றாண்டில் இலங்கை முழுவதும், மும்முடிச் சோழ மண்டலம் என்னும் பெயருடன் சோழர்கள் ஆட்சிக்குட்படுத்தப்பட்டிருந்தது.

■ இலங்கையில் முதன் முதலில் தமிழ்க் கொடி நாட்டியவன் இராஜ இராஜசோழன்.

■ யாழ்ப்பாண அரசர்கள் ஆரியச் சக்கரவர்த்திகள் என வழங்கப்பட்டனர். இவர்கள் 17 ஆம் நூற்றாண்டு வரையும் போர்த்துக்கேயர் இலங்கையில் ஆட்சியை நிறுத்தும் வரையில் ஈழத்தில் தனியரசு நடாத்தினர்.

■ கடைச்சங்க காலத்தில் தோன்றிய நூல்கள் ஆகிய அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை என்பவற்றிலே ஈழத்து பூதந்தேவனார் பாடிய ஏழு பாடல்கள் காணப்படுகின்றன.

■ [illegible] 13 ஆம் நூற்றாண்டில் [illegible] தமிழ் சிறப்பு பெற்றது. தமிழ்ச் சங்கம் ஒன்றும் சரஸ்வதி மகாலயம் என்னும் நூல் நிலையம் ஒன்றும் யாழ்ப்பாணத்திற்கு பெருமை அளித்தது.

■ பராக்கிரம பாகு என்னும் சிங்கள மன்னனுடைய அவையில் போசராச பண்டிதர் என்னும் தமிழ்ப் புலவர் அமைச்சராக இருந்துள்ளார். இவர் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியவர்.

■ ஈழ நாட்டில் தோன்றிய பிரபந்தங்களில் அரச கேசரி ஆக்கிய இரகுவம்சமே பெருங்காப்பியமாகும். இவர் வடமொழியிலே காளிதாசன் இயற்றிய இரகுவம்சத்தையே மொழி பெயர்த்து தமிழில் பாடினார். இது 2400 செய்யுள்களாகும். [illegible] வித்துவான் [illegible] உரை எழுதியுள்ளார்.

■ தமிழ் மொழியில் தோன்றிய முதல் அகராதி 'சதுரகராதி' ஆகும். [illegible] இதனை 1819ல் அச்சிட்டு வெளியிட்டார்.

■ உலகின் முதல் தமிழ்க் கலைக்களஞ்சியம் 'அபிதான கோசம்' யாழ்ப்பாண முத்துத்தம்பிப் பிள்ளையால் வெளியிடப்பட்டது. இதன் பின்னர்தான், அபிதான சிந்தாமணி வெளியானது.

■ இலங்கையில் தோன்றிய முதல் பத்திரிகை உதய தாரகையாகும். 1841ல் இது வட்டுக்கோட்டையில் அச்சாகியது. [illegible]

■ யாழ்ப்பாண நாட்டின் வரலாற்றினைக் கூறும் நூல்கள் யாழ்ப்பாண வைபவமாலை, கைலாய மாலையுமாகும்.

■ [illegible] 1847 ல் முதன் முதலில் யாழ்ப்பாணத்தில் [illegible] வெளியிட்டவர்.

■ [illegible] 13ம் நூற்றாண்டில் [illegible] உண்டு.

■ இலங்கையில் வழங்கும் 1873 பழமொழிகளையும் பார்க்கிவல் பாதிரியார் 1843 ல் யாழ்ப்பாணத்தில் அச்சிட்டு வெளியிட்டார். ■

### வருந்துகிறோம்

7/5/93 களத்தின் 5ம் பக்கத்தில், 'மாணவர்கள் தனிக்கல்வியுடன் ஒதுங்கிவிடக்கூடாது' என்ற தலைப்பிற்குரிய செய்தியை, [illegible] என்ற தலைப்பின் கீழ் தவறுதலாக பிரசுரித்தமைக்காக வருந்துகிறோம்.

# அலைகளின் மீது ஒரு அபாயப் பயணம்

## — கிளாலி அனுபவம் —





இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது, உயிரின ஆராய்ச்சிக்காக, மனித உயிர்களுடன் மிகக் கொடூரமாக விளையாடிய யப்பானிய நாசகாரக் கும்பல்களை உள்ளடக்கியிருந்த, உயிரின ஆராய்ச்சி நிறுவனமே 'யூனிட் 731'. போர்க்கைதிகளுக்கு ஜேர்மனி இழைத்த வரலாறு காணாத கொடுமைகளை விட மிகக்கொடுமையானது இவ் நாசகாரக் கும்பல்களின் சித்திரவதைகளாகும். இவர்கள், கைதிகள் மீது மேற்கொண்ட பயங்கரமான சித்திரவதைகள் பற்றிய இரத்தத்தை உறையவைக்கும் விபரங்கள் அண்மையில் வெளிவந்துள்ளன. அதை இக்கட்டுரை விபரிக்கின்றது.

# யூனிட் 731

இரண்டாம் உலகப் போரில் ஜேர்மன் நாட்டில், முகாம்களில் இருந்த போர்க் கைதிகளுக்கு ஜேர்மன் இழைத்த வரலாறு காணாத கொடுமைகளை அறியாதவர்களே இல்லையெனலாம். இவ்விடயத்தில், ஜேர்மன் நாட்டையும் மிஞ்சிவிட்டது ஜப்பான் நாடு. நினைத்தாலே நடுங்கவைக்கும் மிகப் பயங்கரமான உண்மைகள் தற்போது தெரியவந்துள்ளது.

1975 ஆம் ஆண்டு கருயோஸி நாகா என்ற ஜப்பானிய திரைப்பட தயாரிப்பாளர் இந்த பாதகச் செயல்களில் ஈடுபட்ட 35 கொலை வெறியர்களின் அட்டூழியங்களை அம்பலப்படுத்தினார். இந்நிகழ்ச்சிக்குப் பின் ஜப்பான் மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த பல பிரபல எழுத்தாளர்கள் இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பான் நாட்டில் சிறையிலிருந்த போர்க் கைதிகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை வெளியிடுமாறு, அமெரிக்க இராணுவத்தின் தலைமைச் செயலகமான பென்டகனிடம் வேண்டுகோள் விடுத்தனர். கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகள் மற்றும் செய்திகளைத் தெரிந்து கொள்ளும் சட்டத்தின் கீழ் அமெரிக்க அரசு வெளியிட்டவை, ரத்தத்தை உறைய வைக்கும் மிக மிகப் பயங்கரத் தகவல்கள்:

1937 ஆம் ஆண்டு மஞ்சூரியாவில் கார்பின் என்ற இடத்திற்கு 40 மைல்கள் தொலைவில் உள்ள பிங்ஃபேன் என்ற கிராமத்தில் உயிரின ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றை அமைக்க ஜப்பான் அரசு உத்தரவிட்டது. இந்த விடயம் மிக மிக இரகசியமாக வைக்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் பெயர் யூனிட் 731. இங்கு 3000 போர் வீரர்கள், விஞ்ஞானிகள், அந்நாட்டு செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த தாதிமார்கள். மேஜர் சீரோ இஸி என்பவர் தலைமையின் கீழ் செயற்படத் தொடங்கினர். இந்த நிறுவனம் அமைக்கப்படக் காரணமாக இருந்தவரே கீயோடோ பல்கலைக்கழகத்தில் பயின்ற இந்த டாக்டர் ஸீரோ இஸிதான்.

யூனிட் 731 செய்த முதல் காரியம் டைபாயிட், டைபஸ், ஆந்த்ராக்ஸ், கொலரா, பிளேக், சால்மோ, நெல்கலாகாஸ், காங்ரீரன், பெரியம்மை, டீ.பி. போன்ற மிகப்பயங்கர வியாதிகளை உண்டாக்கும் கிருமிகளை ஏராளமான அளவில் உற்பத்தி செய்ததுதான். இப்பயங்கரக் கிருமிகளை என்ன செய்தார்கள் என்பது மிகக் கொடுமையானது. இங்கு சிறைப்பிடிக்கப்பட்டிருந்த கொரியா, சீனா, ரஸ்யா, அவுஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த ஆண், பெண் கைதிகளுக்கு இக் கிருமிகள் ஊசிகள் மூலம் ஏற்றப்பட்டு அவைகளால் ஏற்படும் பின்விளைவுகள் பற்றி ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டதாம்.

இங்கு நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளில் சில:

சிபிலிஸ் எனப்படும் மோசமான பாலியல் நோய்க்கிருமிகளை ஆரோக்கியமான இளம்பெண் கைதிகளுக்கு செலுத்தி வியாதி முற்றிய சில காலத்திற்குப் பின்னர் இந்த பெண்களோடு ஆண் கைதிகளைத் தொடர்பு கொள்ளச் செய்து நிறைகர்ப்பம் அடைந்தபின்னர் இந்தப் பெண்களைத் துண்டு துண்டாக வெட்டி கர்ப்பப்பையில் இருக்கும் பச்சைக் குழந்தை மற்றும் தாய் பற்றி ஆராய்வது.

கைதிகள் சிலரின் உடலில் உள்ள ரத்தத்தை முழுவதும் வெளியேற்றிவிட்டு அவர்களின் உடலில் குதிரைகளின் ரத்தத்தை ஏற்றுவது.

கைதிகளை வரிசையாகக் கட்டி வைத்தபின் ஆந்த்ராக்ஸ் வாயு குண்டுகளை அவர்களுக்கு அருகில் வெடிக்க வைப்பது. பின்னர் இறந்த கைதிகளின் உடலில் ஆந்த்ராக்ஸ் வாயுவின் விளைவுகளை ஆராய்ந்தறிவது.

40 பாகை பரனைட்டுக்குகுறைவாக உள்ள மிகவும் உறைந்து கிடக்கும் பனிக்கட்டிகளில் கைதிகளை சாகும்வரை வைத்திருந்த பின்னர் அந்த உடல்களின் மீது கொதிக்கும் நீரைக் கொட்டுவது. மனித உடலில் பனியால் ஏற்படும் விளைவுகளை அறியவே இந்த சோதனைகளை நடத்தினார்கள் என்று தெரியவந்தது.

கைதிகளை சாகும்வரை எக்ஸ்ரே கருவி முன் நிறுத்துவது.

நோயுற்ற கைதிகளை வாயு நிரம்பிய அறைகளில் அடைத்து நோய்கள் எவ்வாறு அதிகமாகிறது. உடலை வாயு மேலும் எவ்வாறு பாதிக்கிறது என்பதை அறிவது மனித உடலில் ஏற்படும் வலியை அவன் எவ்வாறு பொறுத்துக் கொள்கிறான் என்பதை அறிய அதாவது சகிப்புத் தன்மையை அறிய, உடலை அணு அணுவாக வெட்டிக் கொண்டே செல்வது.

1945 ஆம் ஆண்டு ஜப்பான் சரணடைந்த போது யூனிட் 731 இல் வேலை செய்த பெரும்பாலானோர் எதிர்கால விளைவுகளுக்கு அஞ்சி, மஞ்சூரியாவில் உள்ள ஒரு ரயில் நிலையத்திலேயே சைனட் என்ற மிகக் கொடிய விசத்தை உட்கொண்டு தங்கள் கதையை முடித்துக் கொண்டனர். உயிருடன் இருந்த மற்ற விஞ்ஞானிகள் இதைப்பற்றி எவரிடமும் தெரிவிப்பதில்லை என சபதமெடுத்துக் கொண்டனர். இரண்டாம் உலகப் போர் முடிந்த உடனேயே, அமெரிக்க மேலிடத்திற்கு இதைப்பற்றி இரகசியத் தகவல்கள் கிடைத்தன. யூனிட் 731 ன் தலைவராக இருந்த மேஜர் சீரோ இஸியை அமெரிக்கா தேட ஆரம்பித்தது. ஐந்து மாதத்தின் பின் அவர் பிடிபட்டார். அமெரிக்கர்கள் நடாத்திய விசாரணையில் இஸி, தான் தலைவராக இருந்த யூனிட் 731 நிறுவனத்தில் மனிதர்களுக்குச் செய்யப்பட்டதாகக் கூறப்படும் கொடுமைகளை வன்மையாக மறுத்தார்.

**க.சத்தியப்பிரியா**

ரஸ்யர்கள் போருக்குப் பின் இந்த இடத்தை கைப்பற்றுவதற்கு சில நாட்களுக்கு முன்னதாகவே, அங்கிருந்த ஆயிரக்கணக்கான மனித உடல்களை எரித்து விட்டார்கள். ரஸ்யர்கள் நடாத்திய விசாரணையிலும் எந்தத் துப்பும் கிடைக்கவில்லை. ருஸ்யர்கள் நடாத்திய விசாரணையிலும் உண்மையை மறுத்து விட்டார்.

ஆனால், அமெரிக்கா அத்தோடு விட்டு விடுவதாக இல்லை. யூனிட் 731 ஐச் சேர்ந்த மற்றவர்களையும் விசாரிக்க அனுமதி கோரியது. இனியும் உண்மையை மறைப்பது நல்லதல்ல என்றுணர்ந்த சீரோ இஸி போர்க்காலக் குற்றங்களில் இருந்து அவருக்கும் யூனிட் 731 ஐச் சேர்ந்த மற்றவர்களுக்கும் விடுதலையளிப்பதாக அமெரிக்கா எழுத்து மூலம் உத்தரவாதம் கொடுத்தால் உண்மை முழுவதையும் கூறத்தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். இந்த விபரங்கள் 1947 ஆம் ஆண்டு மே மாதம் 6ம் திகதி அன்று அமெரிக்க மேலிடத்திற்கு மிக இரகசியமான தந்தி ஒன்றின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

இஸி கூறுவது உண்மையா என்பதை ஆராய பென்டகன், நீதி சாஸ்திர நிபுணர் ஒருவரை போர்ட் டெட்ரிக் என்ற இடத்திலிருந்து அனுப்பியது. இதைத் தவிர பிரபல டாக்டர்களான எட்வின்கில், ஜோசப் விக்டர் ஆகியோரும் இந்த ஆராய்ச்சியில் கலந்து கொண்டனர். விசாரணை 1947 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28 ம் திகதியிலிருந்து டிசம்பர் 12ம் திகதி வரை தொடர்ந்து நடைபெற்றது.

விசாரணையில் வெளிப்பட்ட உண்மைகள், அதில் கலந்து கொண்ட டாக்டர்களையே திடுக்கிட வைத்தது. உலக வரலாற்றில் அதுவரை கண்டுபிடிக்கப்படாத மனித உடல்களைப்பற்றி மருத்துவப் புள்ளி விபரங்களை யூனிட் 731 விஞ்ஞானிகள் கண்டறிந்தார்கள். இக்கால கட்டத்தில்தான் அமெரிக்கா இந்த மருத்துவ தகவல்களை தனக்கு சாதகமாகப் பயன்படுத்த முடிவு செய்து மன்னிக்க முடியாத குற்றங்களைச் செய்த பலரைத் தண்டனையிலிருந்து காப்பாற்றியது. மேலும் இந்த ரகசியங்களை ரஸ்யாவுக்கு தெரியாமல் அமெரிக்கா மறைத்துவிட்டது.

இவ்வளவு தகவல்களையும் உ[illegible] டக்கி செப்சிமோரிஜாரா எ[illegible] பவர் எழுதி வெளியிட்ட "[illegible] வில்லிஸ் கிகாட்டனி" என்ற பு[illegible] தகம் ஒரே வருடத்திற்குள் [illegible] பானில் மட்டும் 1.4 மில்லியன் பிரதிகள் விற்பனையாகின [illegible] புத்தகம் வெளிவந்தபின் [illegible] ஜப்பான் அரசு யூனிட் 731 என்[illegible] ஒரு நிறுவனம் இருந்த உ[illegible] மையை ஒப்புக்கொண்டது [illegible] பானில் மருத்துவ ஆராய்ச்சி[illegible] துறையில் மிகப் பிரபலமா[illegible] விளங்கிய மாசோசி [illegible] (உலகின் முதல் முதல[illegible] செயற்கை இரத்தத்தைக் கண்டு[illegible] பிடித்தவர்) மற்றும் இராசி[illegible] போலியுரா (மனித உடலி[illegible] குளிரால் ஏற்படும் விளைவு[illegible] களைக் கண்டவர்) ஆகியோ[illegible] யூனிட் 731 நாசகார கும்பலி[illegible] னைச் சேர்ந்தவர்களே! ■

# இஸ்ரேல் பிறந்த கதை

இஸ்ரேல் -

அது யூதர்களின் தாயகம்! தங்கள் தாயகத்தை விட்டு அடித்துத் துரத்தப்பட்ட மக்கள் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் குடியேறியிருந்தார்கள். ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளாக, 'அடுத்த செடார் திருநாளை ஜெருசலேமில் கொண்டாடுவோம்' என்ற வசனத்தை அவர்களது வருடாந்த செடார் பண்டிகையின்போது பிரார்த்தனைகளின் இறுதியில் கூறிவந்தார்கள்.

கடந்த நூற்றாண்டில் குறிப்பாக ரஸ்யா, போலந்து போன்ற நாடுகளில் யூதப்படுகொலைகள் அதிகமாக இடம்பெற்றன. அதையடுத்து, தாய்நாடு திரும்பும் உத்வேகம் நாடு கடந்த யூதர்களிடையே ஏற்பட்டது. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது கிட்லரின் நாசி ஜேர்மனியில் அறுபது இலட்சம் யூதர்கள் கொல்லப்பட்டனர். இதையடுத்து மீண்டும் "தாயகம் நோக்கிய பயணம்" யூதர்களின் தாரக மந்திரமாகியது.

பலஸ்தீனத்திற்குள் நுழைய பிரித்தானியர் தடை விதிக்கின்றனர். ஆயிரக்கணக்கான மக்கள் சைப்பிரஸ் தீவில் மீண்டும் தடை முகாம்களில் அடைக்கப்படுகின்றனர்.

"ஒரு மனிதனின் வாழ்நாளில், தான் வாழ்வதற்காகத் தன் மனம் வெறுக்கும் எவ்வளவோ காரியங்களைச் செய்கின்றான். அவமானம், சித்திரவதை, மரணத்திற்குக் கூடப்பயப்படாமல் தாங்கள் கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்கும் உலகின் இந்தச் சிறிய தொகை மனிதர்கள்...."

ஆயிரம் இடர் வந்தபோதும் "தாயகம் நோக்கிய பயணத்தை"த் தொடர்கின்றார்கள்.

தேனும் பாலும் வழிந்தோடும் தேசம் என்ற கற்பனையோடு, தாயக மண்ணுக்குத் திரும்பும் அம்மக்களுக்குத் தெரிவதெல்லாம் வெறுமையான பாலைவனங்களும் அணுக முடியாத சதுப்பு நிலங்களுமே.

இருப்பதற்கு எதுவும் இல்லை. இருப்பதற்கு இனிய நாடு ஒன்று போதும் என்ற உணர்வோடு, ஒரு கையில் துப்பாக்கி மறுகையில் மண்வெட்டி! ஊணின்றி, உறக்கமின்றி வியர்வையையும் இரத்தத்தையும் விலையாகக் கொடுத்து விலைமதிப்பில்லாத தங்கள் தாயகத்தை மீட்டெடுக்கின்றார்கள்.

ஆனால், இன்றைய இஸ்ரேல் ஒரு ஆக்கிரமிப்பின் சின்னமாக மாறியிருப்பது ஏற்புடையதொன்றல்ல. ■

## சூரிய நெருப்பவள்



தெற்கே எழுந்த சூரிய நெருப்பவள்
வடக்கே காரிருள் விரட்டிய தமிழவள்
உண்ணா நோன்பால் உறுதியை தந்தவள்
உலகம் வியக்க உயர்ந்த தாயவள்

வேலியாய் விலங்குகள் காவல் இருந்தன
விடுதலைப் பயிர்களை கடித்துக் குதறின
வீதிக்கு வீதி சாவுகள் நிகழ்ந்தன
வீசிடும் காற்றும் தூய்மையை இழந்தது

ஆயிரம் மொழிகள் கரியினில் கேட்டது
அருமைத் தமிழ்மொழி பேச்சினை இழந்தது
குளித்திடக் கூட பெண்கள் பயந்தனர்
குழந்தைகள் கூட சிரிப்பை மறந்தனர்

எங்கும் காரிருள் சூழ்ந்து கிடந்தது
ஏங்கிய மக்கள் முகங்களைத் தேடினர்
தாயவள் பூபதி தவித்துப் போனாள்
தனியே நின்று போரினைத் தொடுத்தாள்

பாரத நாட்டின் வேடம் கலைந்தது
பாரத மாதா மானம் இழந்தாள்
பாரெங்கும் எம்போர் நியாயம் தெரிந்தது
அம்மா பூபதி அமைதியாய் தூங்கினாள்

- யோகரெத்தினம் யோகி

# கொதி நிலையில் இந்திய சாம்ராச்சியம்

**1992,** மார்கழி 6ம் திகதி உலகின் கவனத்தைத் தன்பக்கம் திருப்பிய பாப்ரி மசூதித் தகர்ப்பும்,

இதைத் தொடர்ந்து - இந்திய முஸ்லீம்களை பீதிக்குள்ளாக்கும் விதத்தில் எழுந்த இந்து -முஸ்லீம் கலவரமும்,

இக்கலவரங்களின் விளைவாக இந்திய தேசத்தையே உலுக்கிவிட்ட பம்பாய் தொடர் குண்டு வெடிப்புகளும் இந்திய வரலாற்றிலேயே மிக மோசமான விளைவுகளைக் கொடுத்த -கொடுக்கப் போகின்ற சம்பவங்களாக அமைந்துவிட்டன என்பது பரவலான கருத்து.

இந்த, வன்முறைச் சம்பவங்களுடன் பாரதீய ஜனதாக் கட்சியின் வெளிப்படையான மதவாத அரசியலும், ஆளுங்கட்சியான இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பீடத்தில் தோன்றியுள்ள நெருக்கடிகளும், தமிழ்நாட்டில் மீண்டும் தலை தூக்கியுள்ள இந்தி எதிர்ப்பு போராட்டங்களும் ஒன்று சேர்ந்து, இந்திய சாம்ராட்சியத்தை ஒரு கொதிநிலைக்குக் கொண்டு சென்றுள்ளன.

பாப்ரி மசூதி தாக்கப்பட்டதிலிருந்து எழுந்த வன்முறை அலைகளில் சிக்கி சுமார் 2000 இந்தியர்கள் உயிரிழந்துள்ளனர். 6000 பேர் காயமடைந்துள்ளனர். என இந்தியப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

இதில், இந்து -முஸ்லீம் கலவரங்களில் மட்டும் 1700 பேர் உயிரிழந்துள்ளனர் 5000 பேர் காயமடைந்துள்ளனர். மீதிப்பேர் குண்டுவெடிப்புக்களில் கொல்லப்பட்டுள்ளனர். இம்மதக் கலகம் இந்தியாவின் நுழைவாயில் என அழைக்கப்படும் பம்பாய் நகரிலேயே மிக மோசமாக நடந்துள்ளது. 'மராட்டிய' அல்லது மகாராஸ்டிரா என அழைக்கப்படும் மாநிலத்தின் தலைநகர் தான் பம்பாய். ஒருகோடி மக்கள் தொகையைக் கொண்ட பெருநகரம் இது. இதில் 15 வீதத்தினர் முஸ்லீம்களாவர்.

இக்கலகங்கள் ஓய்ந்த பின், 12.03.1993 அன்று பம்பாய் நகரை உலுக்கிய தொடர் குண்டு வெடிப்புகள், முஸ்லீம் தீவிரவாதிகளால்தான் நடாத்தப்பட்டுள்ளன என்பது இப்போது தெளிவாகியுள்ளது. இக் குண்டு வெடிப்புகள் முஸ்லிம்களின் படுகொலைகளுக்குப் பதிலடியாகவே நிகழ்ந்துள்ளன என்பது தெளிவு. இக்குண்டு வெடிப்புகளுக்கு பின்னால், பாகிஸ்தான் இருந்துள்ளது என இந்தியா குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தியாவிலுள்ள 'பிரிவினைவாதிகளுக்கு' பாகிஸ்தான் உதவி அளிக்கிறது என்ற இந்தியாவின் குற்றச்சாட்டுகளுடன் பாகிஸ்தான் ,பங்களாதேஸ் ஆகிய நாடுகளில் உள்ள கிளர்ச்சியாளர்களுக்கு இந்தியா உதவுகின்றது என்ற பதில் குற்றச்சாட்டுக்களும் தொடுக்கப்பட்டு வருகின்றன.

**இந்து மத உணர்வைக் கொழுகொம்பாகக் கொண்டு இந்திய சாம்ராஜ்யத்தின் கிரீடத்தை அடைய, பா. ஐ. கட்சி பகீரத முயற்சி செய்கின்றது.**

இருபகுதியினரின் குற்றச்சாட்டுக்களிலும் உண்மை உண்டு என்பதே பொதுவான கருத்து.

ஆனாலும், இப்பிராந்தியத்தில் தான் ஒரு முடிசூடா மன்னனாக இருக்கவேண்டுமென்ற மேலாதிக்கவாத இலட்சியத்திற்காக, அருகிலிருக்கும் தேசங்களின் சுதிரத்தன்மையை, ஏதாவது ஒருவகையில் குலைத்துவிடுவது இந்திய அரசின் ஒரு வெளிவிவகார கொள்கையாகவே இருந்து வருகின்றது என்பதும், தென்னாசிய பிராந்திய மக்கள் அறிந்ததொன்று.

இந்தியாவில் மசூதி தகர்ப்பும், முஸ்லீம்கள் மீதான வன்முறையும் நடைபெற, இதற்குப் பதிலடியாக, அயல் முஸ்லீம் நாடுகளில் இந்துக் கோயில்கள் தகர்ப்பும் இந்துக்கள் மீதான வன்முறையும் நடந்தன.

இந்திய உபகண்டத்தில், இந்து -முஸ்லீம் கலவரங்கள் நடைபெறுவது புதிய விடயமல்ல.

ஆனால், இன்று அது ஒரு புதிய அரசியல் பரிமாணத்துடன், இந்திய அரசியல் அரங்கில் எழுச்சிபெற்றுவரும் சக்திமிக்க ஒரு அரசியல் கட்சியின் விருப்பத்தின் பேரில் நடைபெறுகின்றது என்பதுதான், புதிய விடயம்.

இந்த மாற்றம், இந்திய சாம்ராஜ்யத்தின் ஆயுளைக் குறுகச் செய்துவிடும் என்பது, பலரது கருத்து.

இந்து மத உணர்வைச் சுக்கானாகப் பிடித்துக் கொண்டு இந்திய அரசியல் சமுத்திரத்துள் வேகமாகச் செல்லும் ஒரு கப்பலாக, பாரதீக ஜனதாக் கட்சி வளர்ந்து வருகின்றது.

'இந்தியா இந்துக்களுக்கே' என்ற கோசத்துடன், இந்திய அரசின் மதச்சார்பின்மைக் கோட்பாட்டை மாற்றி, சாம்ராச்சியம் அமைக்கும் நோக்குடன், பா.ஐ. கட்சி பல்வேறு உப அமைப்புக்கள் கொண்டு செயற்படுகின்றது. இதனுடைய அரசியல் நிலைப்பாட்டை, பெருமளவு வட இந்திய இந்துக்கள் ஏற்றுக் கொண்டு வருகின்றனர்.



**இன்றைய சூழ்நிலையில், கட்சி எதிர்நோக்கும் பாரிய நெருக்கடிகளுக்கு முகம்கொடுப்பதற்காக, தலைமையைச் சிதையாமல் வைத்திருக்கவே, நொண்டிக் குதிரையானாலும் ராவை காங்கிரஸ் வண்டியில் பூட்டித் தள்ளிக் கொண்டு செல்கிறார்கள்.**

534 இடங்களைக் கொண்ட இந்திய நாடாளுமன்றத்தில், 1984 ஆம் ஆண்டு பாரதீய ஜனதாக் கட்சி, ஆக இரண்டே இரண்டு இடங்களை மட்டுமே வைத்திருந்தது. ஆனால், இந்த எண்ணிக்கை 1989 ஆம் ஆண்டு 89 ஆக அதிகரித்தது. 1991 ஆம் ஆண்டு 119 ஆக அதிகரித்தது. இப்போது ஒரு தேர்தல் நடைபெறுமாக இருந்தால் இந்த எண்ணிக்கை 170 ஆக அதிகரிக்குமென, 'இந்தியா [illegible]' சஞ்சிகை கருத்துக் கணிப்புச் செய்து, ஆருடம் [illegible]ளது.

பாரதீய ஜனதாக் கட்சி பெற்றுவரும் இந்த அரசியல் ஸ்தானம், அதன் இந்துத்துவக் கொள்கைக்கு மட்டுமல்ல, சர்ச்சைக்குரிய அதனுடைய செயற்பாடுகளுக்கு இந்திய மக்கள் மத்தியில் கிடைத்துவரும் அங்கீகாரத்தையுமே காட்டுகின்றது.

இவ்விதம், இந்துமத உணர்வைக் கொழுகொம்பாகக் கொண்டு, இந்திய சாம்ராஜ்யத்தின் கிரீடத்தை அடைய பாரதீய ஜனதாக் கட்சி பகீரத முயற்சி செய்கிறது.

இதேவேளை ஆளும் கட்சியான இந்திரா காங்கிரஸ் கட்சி, இன்று ஒரு நெருக்கடி நிலைக்குள் சிக்கியுள்ளது. கட்சியின் தலைவரும் பிரதமருமான நரசிம்மராவை பதவியிறக்க வேண்டும் என்ற பிரச்சனை எழுந்துள்ளது.

இந்திய அரசியல் வானில், பெரும் புயலாகக் கிளம்பியுள்ள பாரதீய ஜனதாக் கட்சியினது சவாலை எதிர்கொண்டு வெல்லக்கூடிய ஒருவராகவோ அல்லது இந்தியாவின் பரப்பளவைப் போல பிரச்சனைகளையும் கொண்ட சாம்ராஜ்யத்தின் கிரீடத்தை உறுதியுடன் சுமக்கும் வல்லமையோ பிரதமர் ராவுக்கு இல்லை என்பது, அவரது அதிருப்தியாளர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சரும், முன்னாள் மத்தியப் பிரதேச முதலமைச்சருமான அர்ஜுன்சிங் தான் அதிருப்தியாளர்களின் தலைவர் ஆவர்.

**தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அடுத்த சட்டசபைத் தேர்தலுக்கான 'விதைப்புக் காலம்' தொடங்கிவிட்டது. 'இந்தி எதிர்ப்பு' என்ற விதையை தி.மு.க.-வும், அ.தி.மு.க.வும் வெவ்வேறு அளவுகளில் -பரிமாணங்களில் -விதைத்துள்ளன. அறுவடையை யார் செய்யப் போகின்றார்கள்?**

மதத்தை அரசியலுக்குள் கலக்கும் கட்சிகளைத் தடை செய்ய வேண்டுமென இவர் கருத்துக் கூறியிருந்தார். ஆனால், மதத்தையும் சாதியத்தையும் அடிப்படையாகக் கொண்டே இந்தியாவின் அரசியல் கட்சிகள் (இந்திரா காங்கிரஸ் உட்பட ) அரசியல் நடாத்துகின்றன. எனவே இந்திய மக்களது அரசியல் தலைவிதியை பெருமளவு நிர்ணயிக்கும் மதத்தையோ சாதியத்தையோ அரசியலிலிருந்து தூக்கி வீசி விடுவதென்பது இந்தியாவில் இயலாதது.

பிரதமர் ராவ் தொடர்ந்தும் பதவியில் நீடிக்க வேண்டும் எனக் கோருவோர் ராவின் தலைமைத்துவத்தை ஏற்றுள்ளார்கள் எனக் கூற முடியாது. இன்றைய சூழ்நிலையில், வெளியிலிருந்து கட்சி எதிர்நோக்கும் பாரிய நெருக்கடிகள் மத்தியில், கட்சித் தலைமைப் பீடத்திலும் பிளவுகள் ஏற்படுமோனால் அது கட்சியின் எதிர்கால நலனைப் பாதிக்கும் என்பதினாலேயே, ராவ் தொடர்ந்தும் பதவியிலிருப்பதை ஆதரிக்கின்றனர்.

மசூதித் தகர்ப்பைத் தொடர்ந்து பா.ஜ. கட்சி ஆட்சி செய்த மூன்று மாநிலங்களின் அரசுகளையும் ராவ் அரசு கலைத்துவிட்டது. இன்னும் ஒரு வருடத்தில் அந்த மாநிலங்களில் தேர்தல்கள் நடைபெறும். அந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தனது முழுப்பலத்தையும் ஒற்றுமையுடன் பயன்படுத்தி, வெற்றி பெற வேண்டும். இல்லாவிடில் இந்திய நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல்களை நடத்த வேண்டிவரும். அப்படியான நிலையில் ஒரு பொதுத் தேர்தல் நடந்தால் காங்கிரஸ் கட்சி தோல்வியையே தழுவ வேண்டிவரும் என காங்கிரஸ் நலன் விரும்பிகள் கருதியதன் விளைவே, நொண்டிக் குதிரையானாலும் ராவை காங்கிரஸ் வண்டியில் பூட்டி, தள்ளிக் கொண்டு செல்கின்றார்கள்.

இவைகள் இப்படியிருக்க, தமிழ் நாட்டில் நடைபெறும் சில சம்பவங்கள் இந்திய தேசிய அரசியலில் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்து வருகின்றன. அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டு முறிந்ததைத் தொடர்ந்து ஏற்பட்டு வரும் சில அரசியல் மாற்றங்கள், தமிழ் நாட்டுத் தேர்தல் களத்தை கொதிக்கக் கிளறி பண்படுத்தத் தொடங்கியுள்ளன.

பா.ஜ. கட்சி தமிழ் நாட்டில் வேரூன்ற எடுத்துவரும் முயற்சிகளும், தி.மு.க. நடத்திய மாநில மகாநாடும், கட்சிகள் கூட்டுச் சேர்வதற்கான வதந்திகளும் மறுப்புகளும், கட்சித் தொண்டர்களின் தீவிரமான செயற்பாடுகளும் இவற்றைத் தெளிவுபடுத்துகின்றன.

சுருக்கமாகச் சொன்னால், தமிழ் நாட்டைப் பொறுத்தவரை, அடுத்த சட்டசபைத் தேர்தலுக்கான 'விதைப்புக் காலம்' தொடங்கிவிட்டது.

'இந்தி எதிர்ப்பு' என்ற விதையை தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் வெவ்வேறு அளவுகளில் பரிமாணங்களில் விதைத்துள்ளன.

அறுவடையை யார் செய்யப்போகிறார்கள் எனத் தெரியவில்லை.

எது எப்படி நடந்தாலும், தமிழ் நாட்டுத் தமிழனிடம் எழும் மொழி உணர்வும், இன உணர்வும் அரசியல்வாதிகளின் அதிகாரப் பசியுடன் தணிந்துவிடும் என்பது, சோகமான பழைய வரலாறு ■

## இரு தேசங்களால் ஆளப்பட்ட அந்தோரா எனும் சிறிய நாடு சுதந்திர அரசாக உதயம்

ஐரோப்பிய பிரேனி மலையில் அமைந்துள்ள சிறிய நாடான அந்தோரா சுதந்திரம் பெற்ற தனிநாடாக அண்மையில் உதயமாகியுள்ளது. கடந்த பல நூற்றாண்டுகளாக இந்தச் சிறிய நாடு அயலில் உள்ள பிரான்ஸ், ஸ்பெயின் நாடுகளால் நிர்வகிக்கப்பட்டு வந்தது.

சுதந்திரம் பெறுவதற்காக அந்தோரா நாட்டில் நடைபெற்ற சர்வசன வாக்கெடுப்பில் 74 சதவீதமான மக்கள் ஆதரவாக வாக்களித்தனர். தற்போது முழுமையாக சுதந்திரம் பெற்ற தனிநாடாக மாறியுள்ள அந்தோராவின் அரசியல் அதிகாரம் தெரிவு செய்யப்படும் பாராளுமன்றத்திடம் கொடுக்கப்படும்.

அந்தோரா பாராளுமன்ற தலைவர் நாடு சுதந்திரம் பெற்றதை அறிவித்ததை அடுத்து, அச்சிறிய நாடானது இரண்டு நாட்களாக விழாக் கோலம் பூண்டிருந்தது.

இந்நாட்டின் புதிய தூதரகங்கள் பிரான்ஸ், பெல்ஜியம், பிரிட்டன், கொலம்பியா, ஜேர்மனி ஆகிய நாடுகளில் திறக்கப்படும் என்றும் ஐரோப்பிய பொருளாதார சமூகத்துடனான தொடர்புகள் ஏற்படுத்தப்படும் எனவும் இந்நாட்டின் பாராளுமன்ற குழுத் தலைவர் அறிவித்துள்ளார் ■

## மஸிடோனியா ஐ.நாவில் புதிய நாடாக இணைவு

முன்னாள் யூகோஸ்லாவிய குடியரசான மஸிடோனியா ஐ.நாவின் 181 ஆவது அங்கத்துவ நாடாக அனுமதிக்கப்பட்டது. கொடி பெற்றப்படாது தற்காலிகப் பெயருடன் வாக்கெடுப்பின்றியே அதை பொதுச்சபை அனுமதித்தபோது பார்வையாளர் பகுதியல் இருந்து மஸிடோனியா என்ற கோசமும் எழுந்தன. மஸிடோனியா மக்கள் தமது நாடு ஐ.நாவில் அனுமதிக்கப்பட்டதை வெடிகொளுத்தி கொண்டாடினர்.

# தமிழீழத்தில் நாசவேலைகள்

## ❀ மக்களின் போராட்ட உறுதியை உடைப்பதும், அவர்களைக் குரூரமான முறையில் பழிவாங்கவதும்தான் சிங்கள அரசின் நோக்கம்.

பொதுமக்கள் மத்தியில் நாச வேலைகள் புரிவதற்கென வெடிமருந்துகளைக் கடத்தி வந்தது தொடர்பாக மூவரை கடந்த மாதம் புலிகளின் புலனாய்வுத் துறையினர் கைது செய்திருந்தனர். இவர்கள் கடத்தி வந்த வெடிமருந்துகளையும் கைப்பற்றியிருந்தனர்.

கற்பூரத்தைப் போன்று நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டு கற்பூரப் பெட்டிகளில் அடைக்கப்பட்டிருந்த C-4 எனப்படும் இச்சக்தி வாய்ந்த வெடிமருந்து, வவுனியா பாதையூடு வடதமிழீழத்துள் கொண்டுவரப்பட்டிருந்தது.

இவ்விவகாரம் தொடர்பாக நடாத்தப்பட்ட விசாரணைகளின் பின், இதில் இருவர் விடுதலை செய்யப்பட்டனர்.

மாரிமுத்து கந்தசாமி என்ற நபர்தான் இவ்வெடிமருந்து கடத்தலின் சூத்திரதாரி ஆவர். மற்றைய இருவரும் வெடிகுண்டு பற்றிய எவ்வித விபரமும் தெரியாத நிலையில், வியாபாரம் என்ற ரீதியில் கற்பூரப் பொதிகளுடன் சேர்ந்திருந்த வெடிமருந்தைக் கடத்தி வந்து கொடுத்திருந்தனர்.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வடதமிழீழத்தில் இரகசியமான முறையில் குண்டுகளை வெடிக்கச் செய்து, உயிரிழப்புக்களை உண்டுபண்ணி மக்களைப் பீதியில் வாழவைக்கச் சிங்களப் படை முயற்சிக்கின்றது. சிங்களப் பேரினவாதம் புரிந்து கொண்டிருக்கும் தமிழீழ அழிப்பில் இதுவும் ஒரு அம்சமாகும்.

இதன்மூலம் குடா நாடு மற்றும் வன்னிவாழ் மக்களது போராட்ட உறுதியை உடைப்பதும், குரூரமான முறையில் அவர்களைப் பழிவாங்குவதும்தான் இதன் பிரதான நோக்கம்.

சிங்களப் படைகள் விரிக்கும் காசு வலைக்குள் அல்லது சலுகைத் தூண்டிலில் பேராசை காரணமாக சிக்குப்படும் சிலரினதும், உளவாளிகளினதும் துணையுடன், சிங்களப்படைகள் இத்தகைய குண்டு வெடிப்புக்களை நடாத்த முயல்கின்றன.

முன்னர் யாழ்.பஸ் நிலையத்திலும், யாழ்.போதனா வைத்திய சாலையிலும் மக்கள் மத்தியில் குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டிருந்தன. ஆனால், அதிர்ஸ்டவசமாக எவரும் கொல்லப்படவில்லை.

ஆனால், கொம்படி, ஊரியான் பாதைவழியே பயணம் செய்த மக்களை இலக்காகக் கொண்டு நடாத்தப்பட்ட குண்டு வெடிப்பில், 9 பொதுமக்கள் உடல் சிதறிப் பலியானார்கள். பலர் படுகாயமடைந்திருந்தனர்.

இதே போன்றதொரு குண்டு வெடிப்பை வன்னி மாவட்டத்தில் மேற்கொள்ள சிங்களப் படையினர் எடுத்த முயற்சியை, இனப்பற்றுமிக்க இருவர் (சிவனு கந்தசாமி, நவரத்தினம் இராசமணி) புத்திசாதுரியத்துடன் செயற்பட்டு முறியடித்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திகிலை உண்டு பண்ணும் முறையில் கொலைகளைச் செய்து, மக்களைப் பயப்பிராந்தியுள் ஆழ்த்தி அவர்களைப் பணியச் செய்வது, சிங்கள அரசு கடைப்பிடித்துவரும் ஒரு தந்திரம்.

1988 -1989 ஆண்டுக் காலப்பகுதியில் தென்னிலங்கையில் அரசுக் கெதிராக ஜே.வி.பி.யினர் நடாத்திய கிளர்ச்சியினை ஒடுக்க, சிங்கள அரசு இந்த வழிமுறையைக் கடைப்பிடித்தது. ஆளுங்கட்சிக்கு எதிரானவர்கள் எனச்சந்தேகிக்கப்பட்ட சிங்கள இளைஞர் -யுவதிகளை மர்மமான முறையில் கொலை செய்து அவர்கள் மீது ரயர் போட்டு எரித்து, தலையைத் துண்டித்தெறிந்து சிங்கள இனத்தையே பீதியடையச் செய்து இரத்த வெள்ளத்தில் கிளர்ச்சியை ஒடுக்கினர்.

இந்தக் காட்டுமிராண்டித்தனத்தையும் ஒரு வழிமுறையாகக் கொண்டுதான் இன்று தென் தமிழீழத்தில் சிங்கள படைகள் தமிழின அழிப்பில் ஈடுபடுகின்றன.

ஜே.வி.பி.யின் காலத்தில் தென் இலங்கையில் என்ன மாதிரியான சூழ்நிலை நிலவியதோ, அதை ஒத்த சூழல் இப்போது கிழக்கு மாகாணத்தில் நிலவுகிறது என, கிழக்கு மாகாண இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அல்கம, சண்டே ஒப்சேவர் (7.3.1993) பத்திரிகைக்கு கூறியுள்ளார்.
88 -89 ஆண்டுக்காலப்பகுதியில் கொடூரமான வழிமுறைகளைப் பயன்படுத்தி சிங்கள இளைஞர்களை கொன்று குவித்த இராணுவ அதிகாரிகளுள் அல்கமவும் முக்கியமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. இன்று இலா தலைமையின் கீழுள்ள கிழக் மாகாண சிங்களப் படைக தமிழ் மக்கள் மீது எத்தகை வன்முறைகளைப் புரிந்து கொ டிருக்கின்றன என்பதை, மேஜ ஜெனரல் அல்கம தன்னை அறியாமல் வெளிப்படுத்தியு ளார்.

வட தமிழீழம் புலிகளின் கட் பாட்டுக்குள் இருப்பதால் ஜே வி.பி. மீது பிரயோகித்த கொலைப் பாணியை அல் தென் தமிழீழத்தில் புரி கொண்டிருக்கும் பீதியூட் இனப் படுகொலைப் பாணி இங்கே சிங்கள படைகளா செய்ய முடியாதுள்ளது.

இதனால்தான், மக்கள் கூ இடங்களில் மர்மமான முறையி குண்டுகளை வெடிக்கச் செய் கண்மூடித்தனமான விமான தாக்குதல்களை எறிகணை தாக்குதல்களை நடாத்தி வட தமிழீழ மக்களை பீதிக் வாழவைக்க சிங்கள படை முயற்சி செய்கின்றது. இ மூலம் இப்பகுதி மக்கள் போராட்ட உறுதியை உடை வட தமிழீழம் முழுவதையும் கிரமித்து, தான் விரும்பியவ இன அழிப்பில் ஈடுபடலாம் சிங்கள பேரினவாதம் க காண்கின்றது. ■

---

### அலைகளின் மீது....

எல்லாருடைய மனமும் தத்தமது வாழ்வின் கடைசிக் கணங்களை நோக்கிச் செல்கின்றது. என் மனதும் எனது வாழ்வையும், எனது வாழ்வில் நடந்த சம்பவங்களையும், இப்போது இக்கடலில் அநாதரவாகச் சாகப்போகிறேன் என்ற தவிப்பையும் கொண்டு கலங்குகிறது.

ஒருவர் கூடத் தலையை நிமிர்த்திப் பார்க்கவில்லை. எஞ்சின் நிற்பாட்டப்பட்டதனால் படகு தள்ளாடுகிறது. ஒவ்வொரு அலையும் படகைத் தூக்கித் தூக்கிப் போடுகிறது.

வெடிச்சத்தம் நின்ற பின்பும் கொஞ்ச நேரம் ஒருவரும் தலையைத் தூக்கவில்லை. பின் அமைதி நிலவவே, எல்லாரும் தலையைச் சற்றுத் தூக்கி கடற்பரப்பை அலசுகிறார்கள்.

'கண்போட்' ஓடிவிட்டது என்பதை அறிந்தபின், ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் கடலை வெறித்தபடி இருந்தனர்.

பின் படகு 'ஸ்ராட்' பண்ணப்பட்டு மீண்டும் அலையை எதிர்த்து -கிழித்து -உயர்ந்து -ஓடிக்கொண்டே இருக்கிறது.

அரை மணித்தியால ஓட்டத்திற்குப் பின் கரையிலிருந்து கொளுத்தப்பட்ட 'சூள்' வெளிச்சம் தெரிய, எல்லாரது முகங்களும் அவ்விருளில்கூடப் பிரகாசிக்கின்றன. இப்போது, கடல்நீர் பழைய மாதிரி எழுந்து படகிற்குள் வீழ்ந்தபோதும், ஒருவருக்கும் குளிரவில்லை, கண்கள் எரியவில்லை, ஏன் நாகூடக் கசக்கவில்லை.

வெளிச்சம் வரவரப் பெருத்து, இறுதியில் வெளிச்சத்திற்கு மிக அருகில் வந்ததும், மண்பிட்டி தட்டிப் படகு நிற்கிறது.

"ஆம்பிளையள் எல்லோரும் இறங்கிப் படகைத் தள்ளுங்கள்."

ஓட்டி சொன்னதும், எல்லாரும் குதித்து உற்சாகத்துடன் படகைத் தள்ளுகிறோம். சேற்றினுள் கால்கள் புதையப் புதையத் தள்ளி ஒருவாறு கரையை அடைகிறோம்.

கரையை அடைந்த நான் எனது 'பாக்'கையும் எடுத்துக் கொண்டு நடக்கின்றேன். கால்கள் நடக்கின்றன; ஆனால், மனமோ சற்றுமுன் கடலில் எனது வாழ்வின் இறுதிக்கணங்கள் வரை சென்ற சம்பவங்களை, அசைபோடுகிறது.

அப்போது, அருகில் இருந்த சாப்பாட்டுக் கடையொன்றில் ஒலித்த -

"விழிதூங்க மறந்திங்கு விசைப்படகைப் பார்த்திருந்து, கதைமுடித்த எம் தோழர் சேதியினைத் தாங்கிவரும்... " எனும் பாடல் ஒலிக்கிறது.

முன்னரே நான் கேட்டுப் பாடமாக்கிய பாடல்தான்.

ஆனால், இப்போது, ஒரு புதிய அர்த்தத்துடன் அப்பாடல் எனது காதில் நுழைகிறது! ■

\- முகுந்தன்

---

### சந்தேகங்கள்.....

இதற்கிடையில் காமினி திசநாயக்கா, "பிரேமதாசாவைக் கொன்றவர் என்று கூறப்படுபவர் ஜனாதிபதியுடன் அவரது உத்தியோக பூர்வமான விஜயங்களில் கதிர்காமம், குருநாகலை, பெய்மடுவ, எம்பிலிப்பிட்டிய, அம்பன்பொல போன்ற இடங்களுக்கு உலங்குவானூர்தியில் பயணம் செய்துள்ளார். பிரேமதாசாவின் வாசஸ்தலமான 'சுஜரித'வுக்குக் கூட சென்று வந்துள்ளார். அப்படியானால் புலிகள் இயக்கத்தினரும் அவ்வில்லத்திற்குள் இருந்துள்ளனரா?" என்று கிண்டலாகக் கேட்டுள்ளார்.
இதற்கிடையில் லலித் கொலையில், கொலையாளி மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தவரையும், தப்பியோடிய கொலையாளி மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கு அவர்கள் பயன்படுத்திய ஆயுதத்தையும் மறுநாளே சமர்ப்பிக்கக்கூடிய நிலை இருந்தது. ஆனால் அவர்கள் அதனைச் செய்யவில்லை. ஏன்? என சிறீலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேள்விக்கணை தொடுத்துள்ளார். அத்துடன் லலித் கொலை குறித்து விசாரிக்க பாராளுமன்றத்தைக் கோருவேன். உண்மையைக் கண்டறிவது அவசியம் எனவும் பிரதமர் ரணில் பகிரங்க அறிவிப்பு செய்துள்ளார். இவ்வாறாக லலித் - பிரேமா கொலை தொடர்பான சந்தேகங்கள் இருதரப்பினரது ஆதரவாளர்களையும் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது.

இதற்கிடையில், லலித் அத்துலத் முதலியின் கொலைச் சந்தேக நபரென சுட்டு வீசப்பட்டிருந்த தமிழ் இளைஞன் தடுத்து வைக்கப்பட்டிருந்த கிருலப்பனை பொலிஸ் அதிகாரி பிரேமலால் ரணகல காணாமல் போய்விட்டார் என இறுதியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. இப்பொலிஸ் அதிகாரி களுத்துறை பயிற்சிக் கல்லூரிக்கு பயிற்சிக்கென அனுப்பப்பட்டாரென்று கூறப்பட்டபோதிலும் இவர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கொழும்பு வட்டாரங்கள் அச்சம் தெரிவித்துள்ளன. ■

---

### இராணுவத் தீர்வு.....

அளித்தது. இதைப் போக்குவதற்கு படைகளுக்கு நீண்ட ஓய்வைக் கொடுத்து அவர்களைப் பெரும் போருக்குச் சிறீலங்கா அரசு தயார்படுத்திக் கொண்டிருக்கின்றது.

சீனா, பிரான்ஸ், ரஸ்யா, சில கிழக்கு ஐரோப்பிய நாடுகள் போன்றவற்றிலிருந்து நவீன ரக டாங்கிகள், நவீன விமானங்கள் (புக்காரா, சுப்பர்சோனிக்), எம்.ஐ.-8 ரக உலங்குவானூர்திகள் ஆகியனவும் ஆயுத தளபாடங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
அதிகூடிய அழிவுகளை விளைவிக்கும் எண்ணத்துடன் சிங்கள அரசு இப்போராயுதங்கள் தொடர்பான சிறப்புப் பயிற்சிகளை படையினருக்கு வழங்கி வரு றது.

எனவே நடைபெற்றுக்கொ ருக்கும் ஆயுத்தங்களை எ நோக்குகையில் மாகாணசபை தேர்தலை அடுத்து அதில் த ஏற்பட்டுள்ள தோல்வியை சமாளிப்பதற்கும், அரசி நெருக்கடிகளால் தேய்வடை வரும் சிங்கள பௌத்த பே வாதத்தைப் புதுப்பிப்பதற் லலித் பிரேமா கொலைகள் இவர்களின் சிங்கள ஆதரவா கள் இடையில் ஏற்பட்டு விரிசலை ஒட்டுவதற் கும், திசை திருப்பல் மு யாக தமிழர் தாயகத்தின் மற்றொரு பாரிய தாக்குதலு சிறீலங்கா அரசு தயாராகி கிறது. ■

---

### மாகாணசபை.....

திரக்கட்சி -ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. மிகுதி நான்கு மாகாணசபைகளிலும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவாகியுள்ளது. சிறீலங்காவின் சிங்கள அரசியலில் ஏற்பட்டுள்ள உறுதியின்மையை தேர்தல் முடிவுகள் பிரதிபலித்துள்ளன.
எதிர்வரும் ஆண்டுகளில் நடக்க இருக்கும் ஜனாதிபதி தேர்த பாராளுமன்றத் தேர்தல் ஆ வற்றிற்கு முன்னோடிப் பரீ யாக நடாத்தப்பட்ட இத்தே தலில் ஐக்கிய தேசியக் கட்சி அது எதிர்பார்த்த ஆத கிடைக்கவில்லை. அத்துட பிரேமதாசாவுக்கு சிங்கள ம யிடை செல்வாக்கு இருந் என்ற கருத்தும் பொய்யாகி ளது. ■

---

## படையினரின் தாக்குதலுக்கு
# மூன்று மாதங்களில் 109 தமிழ் மக்கள் பலி

இவ்வாண்டின் முதல் காலாண்டு பகுதியில் 109 தமிழ் மக்கள் சிறீலங்காப் படைகளால் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாண்டு ஜனவரி முதலாம் திகதி முதல், மார்ச் 31ம் திகதி வரையே இவ்வளவு தொகையானோர் படையினரின் தாக்குதலுக்கு மட்டும் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

கொல்லப்பட்ட 109 தமிழர்களில் கிளாலிக் கடற்பரப்பில் வைத்து சிறீலங்கா கடற்படையினரால் பேர் கொல்லப்பட்டனர். 21 படையினரின் எறிகணைத் தா குதல் மற்றும் துப்பாக்கிச் சூ டினாலும் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் 11 பேர் லங்கா விமானப்படையின் சு சொனிக் விமானக் குண்டு சுக்களிலும், 10 பேர் புக்கா மற்றும் சியாமாசெட்டி குண் வீச்சு விமானங்களின் குண் தாக்குதலிலும் கொல்லப்பட் ளனர். ■

# நிகழ்வும் நினைவும்

– திலீபன் –

## பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை! ஏன் இந்த 'ஆசை'?

"தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபா கரனுடன் பேச்சுவார்த்தை நடாத்த யாராவது உதவுவார்களேயானால் அது மகத்தான செயலாகக் கணிக்கப்படும்" என, சிறீலங்காவின் புதிய ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜயதுங்கா தெரிவித்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள் ளன.

சிறீலங்கா அரசின் தொடர்ச்சியான அரசியல் தீர்வு நாடகத்தில் இது புதிய ஒரு காட்சியாக அமைகின்றது.

தலைவர்கள், தலைவர்களுடன்தான் பேச வேண்டும் எனவும், பிரபாகரனுடன் பேச்சு வார்த்தை நடாத்துவது தொடர்பாக டி.பி. விஜ யதுங்கா கருத்துத் தெரிவித்துள்ளார்.

சிறீலங்காவின் புதிய ஜனாதிபதிக்கு தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனுடன் பேச்சு வார்த்தை நடாத்தும் 'ஆசை' ஏன் ஏற்பட்டது?

பிரபாகரனை நேரில் காணும் ஆசையினாலா? அல்லது அதற்குப் பின் அரசியல் 'சதி'கள் ஏதும் உண்டா?

பிரேமதாசாவின் ஆலோசகராக இருந்த பிரட் மன் வீரக்கோன் 'பிரேமதாசா' பற்றி எழுதிய புத்தகத்தில், 'பிரபாகரனை நேரில் சந்திக்கும் விருப்பம் பிரேமதாசாவுக்கு இருந்தது' எனக் குறிப்பிட்டிருந்தமை இங்கு நினைவு கூரத்தக் கது. பிரேமதாசாவினால் நிறைவேற்றமுடியாமல் போன விருப்பத்தினை தான் நிறைவேற்ற வேண் டும் என்ற உந்துதலினாலா இந்த அழைப்பினை விஜயதுங்கா விடுத்துள்ளார்?

அரசியலில் விருப்பங்களும் ஆசைகளும் மட்டும் தீர்மானம் நிறைவேற்றும் காரணிகள் அல்ல. 'நலன்கள்' என்பதே ஒரு தீர்மானம் குறித்த அடிப்படைக் காரணியாக அமையும். இந்த வகையில் டி.பி. விஜயதுங்கா பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடாத்த விரும்புவதாக அறிவித் தமைக்கும் அவரது நலன்களே காரணமாக அமைகின்றது.

பிரேமதாசாவின் திடீர் மறைவிக்குப் பின், சற் றுமே எதிர்பார்த்திராத பெரிய பொறுப்பினை ஏற்றுக்கொண்ட விஜயதுங்காவின் முன் 'இனப்பி ரச்சனைக்குத் தீர்வு காணல்' எனும் நாடகத் தினை நடாத்தி முடிக்க வேண்டிய பெரும் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டது. சிறீலங்கா அரச பீடத்தின் தலைவர் என்ற வகையில், சிங்கள பௌத்த இனவாதத்தின் நலன்களைப் பாதுகாக்க வேண்டியவர் என்ற வகையில், தனது பதவிக ளையும் தனது கட்சியின் ஆட்சிப் பொறுப்பினை யும் தக்க வைத்துக் கொள்ள வேண்டியவர் என்ற வகையில் விஜயதுங்காவினை நோக்கின், தமி ழீழத் தேசிய இனத்தின் நலன்களைப் பேணக் கூடிய ஒரு தீர்வுத் திட்டம் அவரிடம் இருக்க முடியாது. உண்மையாக அவரிடம் எந்தத் தீர்வுத் திட்டமும் இல்லை.

பிரேமதாசா, அரசியல் தீர்வு எனும் நாடகத்தை நடாத்தியவாறு இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிட்டதனைப் போன்றே, விஜயதுங்காவும் ஒரு அரசியல் நாடகத்தை ஆடிக்கொண்டு இரா ணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிட வேண்டிய நிலையில் உள்ளார்.

பிரேமதாசா, தனது 'அரசியல் தீர்வு' விளையாட் டிற்கு சர்வகட்சி மகாநாடு, பாராளுமன்றத் தெரிவுக்குழு போன்றவற்றினைப் பயன்படுத்தி னார். சர்வகட்சி மகாநாட்டினை விட பாராளு மன்றத் தெரிவுக்குழு என்பதே தீவிரமாகவும் இறுதியாகவும் மேற்கொள்ளப்பட்ட பிரேமதாசா வின் நகர்வாகும். பாராளுமன்றத் தெரிவுக்குழு எடுக்கும் எந்த முடிவினையும் தனது அரசு அமுல்படுத்தும் என அவர் தொடர்ச்சியாகத் தெரிவித்து வந்தார். (ஆனால் அவரது ஐக்கிய தேசியக் கட்சி தெரிவுக்குழுவின் முன் எந்தத் தீர்வினையும் முன்வைக்கவில்லை.) இறுதியில் பாராளுமன்றத் தெரிவுக்குழு, கொழும்புத் தமிழ்க் குழுக்களையே திருப்திப்படுத்த முடியாத அளவுக் குத் தத்தளித்தது. தெரிவுக்குழுவின் இத்தகைய தோல்வி, பிரேமதாசாவுக்கு ஏற்படுத்தக்கூடிய அரசியல் நெருக்கடிகளையும், அத்தகைய அர சியல் நெருக்கடியிலிருந்து விடுபட பிரேமதாசா மேற்கொள்ளும் தந்திரோபாயங்களையும் முன்னர் ஒருதடவை இப்பகுதியில் நோக்கியிருந்தோம். மாகாணசபைத் தேர்தல் அறிவிப்பும் பிரேமதாசா தனது நெருக்கடியினைக் கையாள்வதற்காக மேற்கொண்ட நகர்வு எனவும் வெளிப்படுத்தியி ருந்தோம். ஆனால், அம்மாகாணசபைத் தேர் தல் முடிவடைய முன்னரே பிரேமதாசாவின் ஆயுள் முடிவடைந்துவிட்டது. இச்சூழ்நிலையில், ஏற்கனவே தோல்வியடைந்த பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலம் அரசியல் தீர்வு நாடகத் தினை வெற்றிகரமாகவும் கவர்ச்சிகரமாகவும் நடாத்த முடியாது என்பதனை புதிய ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கா உணர்ந்து கொண்டதன் வெளிப்பாடே அவரது புதிய 'ஆசைக்கு' காரண மாகும்.

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டுமென புதிய ஜனாதிபதி உண்மையில் விருப்பம் கொண்டிருப்பின் அவர் செய்திருக்கக் கூடியது என்ன?

விடுதலைப் புலிகளின் நிபந்தனையற்ற பேச்சு வார்த்தை அழைப்புக்கு மதிப்புக்கொடுத்து நிபந் தனையற்ற பேச்சுவார்த்தைக்கு அரசு தயார் என அறிவித்திருக்க வேண்டும்; பேச்சுவார்த்தை நடாத்துவதற்கான உகந்த சூழலை ஏற்படுத்த யுத்த நிறுத்தம் ஒன்றைச் செய்யத் தயாராய் இருக்க வேண்டும்; தமிழ் மக்கள் மீதான பொருளாதார, போக்குவரத்துத் தடைகளை நீக்கத் தயாராக இருக்க வேண்டும்; சுருங்கக் கூறின் அரசியல் தீர்வு காண்பதற்குரிய சூழலை ஏற்படுத்துவதில் சிறீலங்கா அரசு தீவிரமாக உழைக்க வேண்டும்.

ஆனால், சிறீலங்காவின் தற்போதைய அரசியல், இராணுவ சூழ்நிலைகளில் ஒரு அரசியல் தீர்வு காணக்கூடிய நிலையில் எந்த ஒரு அரசியல் தலைவரும் இல்லை. டி.பி. விஜயதுங்காவும் இச்சூழ்நிலைக்கு உட்பட்டவர்தான்.

எனவே, உண்மையில் அரசியல் தீர்வு ஒன்றிற்கு போக முடியாதவராக; அதேவேளை, அரசியல் தீர்வு நாடகத்தினை நடத்த வேண்டியவராக உள்ள விஜயதுங்கா, 'பிரபாகரனுடன் பேச்சு வார்த்தை' எனும் சுலோகத்தினை பயன்படுத்தத் தொடங்கியுள்ளார்.

இச்சுலோகத்தினைப் பயன்படுத்துவதன் மூலம் டி.பி. விஜயதுங்கா அடையக்கூடிய நன்மை என்ன?

தனது தலைமீது சுமத்தப்பட்ட 'அரசியல் தீர்வு' பொறுப்பிற்கு, முக்கியமான ஒரு அரசியல் தீர்வு முயற்சியினை தான் மேற்கொள்ள முனை வதாக ஒரு தோற்றத்தினை ஏற்படுத்த இது அவருக்கு உதவும்.

பிரபாகரனுடன் பேச முடியாதிருப்பதாலேயே தம்மால் அரசியல் தீர்வு காணமுடியாமல் இருக் கின்றது எனக்கூறி இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணமுடியாத தனது இயலாமையை மறைக்க வும் இது அவருக்கு உதவும்.

இதேவேளை, பிரபாகரனுடன் பேசுவது குறித்த எதிர்ப்புக்கும் அவர் முகம் கொடுக்க வேண்டி வரலாம். பிரபாகரனுடன் பேச்சு நடாத் தாமல் எந்த ஒரு தீர்வினையும் அமுல்படுத்த முடியாது என்ற யதார்த்தத்தின் அடிப்படையி லேயே தாம் இந்த முடிவினை எடுத்ததாகக் கூறி, பிரபாகரனுடன் பேசுவது குறித்து எழக் கூடிய எதிர்ப்பைக் கையாள அவர் முனைவார்.

புதிய ஜனாதிபதியின் பேச்சுவார்த்தை குறித்த அறிவிப்புடன், "தமிழர் பிரச்சனை என்று ஒன்று இல்லை, பயங்கரவாதப் பிரச்சனை தான் உள் ளது" என்ற அறிவிப்பும் வெளியாகி உள்ளது.

அப்படியாயின், 'பயங்கரவாதப் பிரச்சனை'யினைத் தீர்க்கவா பிரபாகரனுடன் பேச்சு?

இன்னொரு வகையில் கூறுவதாயின், தமிழீழ மக்களின் ஆயுதம் தாங்கிய போராட்டம் இல் லையெனில் தமிழருக்கு பிரச்சனை எதுவுமே இல்லை என்பதா இவரது வியாக்கியானம்?

தமிழ்த் தேசிய இனத்தின் மீது சிறீலங்கா அரசு களின் தொடர்ச்சியான ஒடுக்குமுறைகளின் வெளிப்பாடான அரசியல் போராட்டங்களின் தொடர்ச்சியே தமிழீழ மக்களின் ஆயுதப் போராட் டம்.

இந்த யதார்த்தத்தினை மறுக்கும் விஜயதுங்கா என்ன நாடகத்தினை ஆடினாலும் இறுதியில் யதார்த்தத்திற்கு முகம் கொடுக்க வேண்டியே வரும். ■

## தியாகி பூபதியின் அறப்போர் ஒரு தேசிய இனத்தின் எழுச்சி

### - விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு

"இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் எமது மண்ணில் காலடி எடுத்து வைத்து, மக்களை அழித்து எமது போராட்டத்தை நசுக்கிக் கொண்டிருந்த வேளை, அன்னை பூபதி தனது அறப்போரை ஆரம் பித்தார். அன்னை பூபதியின் இப்போராட்டம் ஒரு தனிப்பட்ட பெண் உள்ளத்தின் கொதிப்பல்ல. ஒரு தேசிய இனத்தின் சுதந்திர எழுச்சி யின் வெளிப்பாடு."

இவ்வாறு தியாகி அன்னை பூபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவாக விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையின் முழுவிபரமும் வருமாறு:

பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு வடிவங்களில் முன்னேற்றம் கண்டு வரும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழீழப் பெண்ணினம் குறிப்பிடத்தக்க பங்காற்றி உள்ளது. அறுபதுகளில் எழுந்த அகிம்சை வழிப்போராட்டங்களில், பெண்கள் அலையலை யாக அணி திரண்டனர். அதனையடுத்து புலிகளின் தலைமையில் உருவாகம் பெற்ற ஆயுதப் புரட்சிப் போராட்டத்திலும் பெண்கள் கணிசமான அளவு பங்களித்து வருகின்றனர். அனைத்து அடக்குமு றைக்கு எதிராகவும் அணிதிரண்டு போராடிக் கொண்டிருக்கும் பெண்ணினம் வியக்கத்தக்க வகையில் மகத்தான அர்ப்பணிப்புக்க ளைச் செய்து வருகின்றது.

இந்த வகையில் இந்த மண்ணிற்காகத் தம்மை அர்ப்பணித்த தியாகிகளுள் அன்னை பூபதி காலவெள்ளத்தால் அழியாத ஒரு தனிச்சரித்திரம். இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் எமது மண்ணில் காலடி எடுத்துவைத்து, மக்களை அழித்து எமது போராட்டத்தை நசுக்கிக் கொண்டிருந்த வேளை அன்னை பூபதி தனது அறப்போரை ஆரம்பித்தார். அன்னை பூபதியின் இப்போராட்டம் ஒரு தனிப்பட்ட பெண் உள்ளத்தின் கொதிப்பல்ல. ஒரு தேசிய இனத்தின் சுதந்திர எழுச்சியின் வெளிப்பாடு. மிகவும் இக்கட்டான, நெருக்கடியான சூழ்நிலையில் தியாக பூமியின் மூலை முடுக்கெல்லாம் அந்நிய இராணுவத்தின் ஆதிக்கச் சுவடுகள் பதிந்திருந்த வேளையில், சாதாரண மக்கள் துணிந்து போராடத் தயங்கிய நேரத்தில் அன்னை பூபதி தனது அறப்போராட்டத்தை நடாத்தினார்.

தனது 58வது வயதில் அவர் மேற்கொண்ட இந்தத் தியாகப் போராட் டம், அவரது மன உறுதியையும் தேசப்பற்றையுமே காட்டி நிற்கின்றது. போராட்டத்தைக் குழப்புவதற்கு இந்திய ஆக்கிரமிப்புப்படைகள் எத்தனையோ மிரட்டல்கள், அச்சுறுத்தல்களை மேற்கொண்டபோதும் அவற்றிற்கெல்லாம் பணியாது அவர் தனது போராட்டத்தினைத் தொடர்ந்தார். அவரது தியாகப் போராட்டம் பெண்ணினத்திற்கெல் லாம் முன்னுதாரணமாக அமைந்தது.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காரணமாகத் தமிழீழப் பெண்கள் எத்தனையோ அடக்குமுறை, ஒடுக்குமுறைக்குள் சிக்குண்டு தவித் தவேளையில், அன்னை பூபதி தனது அகிம்சைப் போராட்டத்தினால் பெண்ணினத்தை எழுச்சிபெறச் செய்தார்.

ஒரு சாதாரண குடும்பப் பெண் - வயோதிபத் தாய் மேற்கொண்ட இப்போராட்டம் அனைத்துப் பெண்களும் எத்தகைய வாழ்க்கைச் சூழ்நிலையிலும் துணிந்து போராடலாம் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

குடும்ப உறவுகள், சுயநலப்பற்றுக்கள் என்பவற்றைத் துறந்து, எமது இனம், எமது தேசம், எமது மக்கள் என்ற பரந்த அடிப்படையிலான நோக்கத்திற்கான அவர் நடாத்திய இந்தத் தியாகப் போராட்டம் அதியுன்னதமானது. முப்பத்திரண்டு நாட்கள் நீராகாரம் எதுவும் இன்றி தன்னையே உருக்கித் தாயகத்திற்கு ஈந்த இந்தத் தற் கொடை, இதுவரை உலக வரலாற்றில் நிகழாத ஒரு போராட்டச் சம்பவம் ஆகும். விடுதலை இலட்சியத்திற்காக சாகும்வரை உண் ணாவிரதமிருந்து உயிர்த்தியாகம் செய்த உலகத்தின் முதற்பெண்மணி என்ற பெருமையை அன்னை பூபதி எமது போராட்டத்திற்கு தேடித் தந்தார்.

போராட்டத்தின் எழுச்சிக் குரலாக, பெண்குலத்தின் சக்தி வடிவமாக அன்னை பூபதி 19-04-1988 அன்று தனது 58வது வயதில் எமது தேசத்தின் அணையாத தீபமானாள்.

அன்னை பூபதி தனது அகிம்சைப் போராட்டத்தில் தன்னைத் தற்கொடையாக்கி ஐந்து வருடங்கள் மறைந்துவிட்டபோதும், அவரது தியாகம் என்றென்றும் எமது மக்களின் மனங்களில் அணையாத சுதந்திரச் சுடராக நிலைத்துவிட்டது.

எனவே, இத்தகைய தற்கொடையாளி அன்னை பூபதியை நினைவு கூரும் இப்புனித நாளில் எமது விடுதலைப் போராட்டத்தில் தமக் குள்ள தேசியக் கடமையை உணர்ந்து அனைத்து தமிழீழப் பெண்க ளும் அணிதிரண்டு போராட்டத்தை முனைப்புடன் முன்னெடுக்க உறுதி பூணவேண்டும் - இவ்வாறு அவ்வறிக்கையில் கூறப்பட்டுள் ளது. ■

## என்ன குஞ்சாச்சு?



புதியவன்



# கடலலையே நீ கூறு!

பூமிப்பந்தின்
புவியீர்ப்புக்கு அப்பால்
பிரபஞ்ச வெளியையும்
பிளந்துச் சென்றது
மீண்டும் ஒரு
வெடி அதிர்வு.

கர்வப்பட்டுக் கொண்டிருக்கும்
கண்களெல்லாம்
கண்டுபிடிக்கட்டும்
அவர்களது
[illegible]
பெருமையோடு
உரிமை கொள்வோம்.
இவர்கள் தாம்
மானுடத்தின் தோழரென்று.

ஆராய்ச்சி யாளருக்கெல்லாம்
ஓர்
அவசர வேண்டுகோள்
உங்கள்
ஆராய்ச்சிக்கூடங்களில்
இந்த
அர்ப்பணிப்புக்களை ஆராயுங்கள்.

தானைத் தலைவனின்
பாசப்பதிர்வின்
பாதி இரவும்
மெதுவாகக்கழிய
கரிய இருளில்
காற்றோடு காற்றாய்
கரைந்து போனதை
[illegible]
நீதானே?
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
உன்னுடையதுதானே?
[illegible]
[illegible]
[illegible]
நீதானே?

[illegible]
உன்னிடம்
உரிமையோடு கேட்கிறோம்
கடலலையே
நீ
கரையைத் தொடும் போது
காதோடு சொல்லி விடு
"விடுதலையை வென்றெடுங்கள்
அப்போது அவர்கள் வருவார்கள்"
என்று.

- மேஜர் பாரதி -



U.T.O
211 Katherine Rd, London E6 1BU, UK
Tel/Fax: 081-470 8593

T.C.C
P.O.BOX 340251
5270 GUMMERSBACH 34
GERMANY

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris France

W.T.C.C
8002 ZURICH
SWITZERLAND

T.C.C
P.O.BOX 694, MULGRAVE NORTH
VICTORIA 3170 AUSTRALIA

புதிய முகவரி

T.C.C
P.O.BOX 1699 VIKA
0116 OSLO 1 NORWAY

L.T.T.E
DENMARK

T.C.C
Via MARIANO STABILE 24
90139 PALERMO ITALY

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 EL Den Haag Nederland

Printed by Observer Group Newspapers